வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 13.08.2025 புதன்கிழமை இதழ் : 225 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

# பறிக்கப்படுகிறது தமிழர் தாயகம் என்ன செய்கின்றனர் எம். பிக்கள்?

## பிரித்தானிய தமிழர் பேரவை கேள்வி

கொழும்பு, ஓகஸ்ட் 13

**தமிழர் தாயகம் அமைதியாக கைப்பற்றப்படும்வேளையில் நமது பாராளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூக அமைப்புகளும் என்ன செய்து கொண்டிருக்கின்றனர்? நமது உரிமைகளையும் - நமது அடையாளத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்களிடமிருந்து ஏன் இவ்வளவு தேவையற்ற மௌனம் நிலவுகிறது?- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளது பிரித்தானியா தமிழர் பேரவை.**

தமிழர் நிலமான மணலாறின் (வெலிஓயா) தற்போதைய நிலை குறித்து வெளியிட்ட அறிக்கையில் அந்த அமைப்பு மேலும் தெரிவித்தவை வருமாறு,

முல்லைத்தீவின் மணலாறு பல தசாப்தங்களாக சோகமான மாற்றத்தைச் சந்தித்துள்ளது. ஒரு காலத்தில் துடிப்பான தமிழ் கிராமமாக இருந்த இது வளர்ச்சி என்ற போர்வையில் வலுக்கட்டாயமாக மறுபெயரிடப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். குறிப்பாக மாதுறு ஓயா நீர்ப்பாசனத் திட்டம் மூலம் 1988 ஏப்ரல் 16 அன்று இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவிப்பில் மணலாறு என்ற பெயரை வெலி ஓயா என்ற சிங்களப் பெயராக அதிகாரப்பூர்வமாக மறுபெயரிட்டது. இது வெறும் மறுபெயரிடுதல் அல்ல - இது பிராந்தியத்தின்

11

# 62,000 இளையோருக்கு அரச தொழில் வாய்ப்பு

## ஜனாதிபதி அநுர அறிவிப்பு



கொழும்பு, ஓக. 13

அரச சேவையில் 62ஆயிரம் பேரை இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள் ளது - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரி வித்துள்ளார்.

அத்துடன், "எதிர்கால இளைய தலைமுறையினர் வசமே அதிகாரம் செல்ல வேண்டும். அதற்கான பணியையே நாம் ஆற்றி வருகிறோம்.", என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடந்த தேசிய இளைஞர்

11

# வடக்கு, கிழக்கில் ஹர்த்தால் திங்கட்கிழமைக்கு மாற்றம்!

## இலங்கை தமிழ் அரசு கட்சி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13

வடக்கு, கிழக்கில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை விடுக்கப்பட்ட ஹர்த்தால் போராட்டம் திங்கட்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அறிவித்துள்ளது.

இந்த நிலையில், மடு தேவாலய திருவிழா, நல்லூர் பெருந்திருவிழாவின் விசேட திருவிழா என்பவற்றை கருத்தில் கொண்டு இந்த மாற்றம்

11

பாதுகாப்பு பிரதி அமைச்சர் மீதான

# நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகரிடம் கையளிப்பு!

கொழும்பு, ஓக. 13

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண் ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் கையளிக்கப்பட்டது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களால் இந்த பிரேரணை நேற்று செவ்வாய்க்கிழமை நண்பகல் கையளிக்கப்பட்டது. இந்தப் பிரேரணையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட 32 பேர் கையொப்பமிட்டுள்ளனர்.

11



# வீரமுனை படுகொலை நினைவேந்தப்பட்டது!

- த. சகாதேவராஜா -

காரைதீவு, ஓக. 13

அம்பாறை - வீரமுனை கிராமத்தில் படுகொலை செய்யப்பட்ட 400 வரையிலான அப்பாவித் தமிழ் மக்களின் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

வீரமுனை பிள்ளையார் ஆலயம் முன்பாக அமைந்துள்ள படுகொலை நினைவுத் தூபியில்

11

# எழுதுமட்டுவாழ் விபத்தில் பெண் ஒருவர் உயிரிழப்பு!

தென்மராட்சி, ஓக. 13

இ. போ. ச. பேருந்தும் மோட்டார் சைக்கிளை மோதிய விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

தென்மராட்சி - எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், இதே இடத்தைச் சேர்ந்த செல்வகுணசிங்கம் பேரின்பநாயகி (வயது - 55) என்பவரே உயிரிழந்தார்.

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி இ. போ. ச. பேருந்து வந்துகொண்டிருந்தது. அந்த நேரம் ஒழுங்கை ஒன்றிலிருந்து மோட்டார் சைக்கிள் ஏ-9 வீதியில் ஏறியது. அப்போது, பேருந்து மோட்டார் சைக்கிளை மோதியதாகக் கூறப்படுகிறது.

இதில், மோட்டார் சைக்கிளை செலுத்திவந்த

11

# தொண்டைமானாறில் பெண்ணின் சடலம் மீட்பு

- த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 13

தொண்டைமானாறு கடல்நீரேரியிலிருந்து பெண் ஒருவரின் சடலம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மீட்கப்பட்டது.

மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மிதந்துகொண்டிருந்த சடலத்தைக் கண்டு பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் வழங்கினர்.

இதன் அடிப்படையில், அங்கு சென்ற அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை நடத்தியதுடன், சடலத்தையும் மீட்டனர். சடலமாக மீட்கப்பட்ட பெண் தொடர்பான விவரங்கள் தெரியவரவில்லை. (ஐ)

# நிலத்தில் புதைக்கப்பட்ட 40 கிலோ கஞ்சா சிக்கியது

## சந்தேகநபர்கள் மூவர் கைது

- த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஓக. 13

ஊர்காவற்துறையில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 40 கிலோ கஞ்சாவை மன்னாரிலிருந்து வந்த பொலிஸ் சிறப்பு குழு கைப்பற்றியுள்ளது.

ஊர்காவற்துறையில் கிடங்கு வெட்டி பெருமளவு கஞ்சா போதைப்பொருள் பதுக்கிவைக்கப்

11

# பிரியந்தவை பொலிஸ் மா அதிபராக நியமிக்க அனுமதி

## அரசமைப்பு பேரவை வழங்கியது

கொழும்பு, ஓக. 13

நாட்டின் 37ஆவது பொலிஸ் மா அதிபராக தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபரான பிரியந்த வீரசூரியவை நியமிக்க அரசமைப்பு பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை அரசமைப்பு பேரவை கூடியபோது ஜனாதிபதி அநுர முன்வைத்த பரிந்துரை பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன்

11

# சபரிமலை ஐயப்பன் ஆலயம் யாத்திரை தலமாக அங்கீகாரம்

## அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 13

இந்தியாவின் சபரிமலை ஐயப்பன் ஆலயத்தை புனித யாத்திரை தலமாக பிரகடனப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சபரிமலைக்கு யாத்திரை செல்லும் பக்தர்களுக்கான போக்குவரத்து, வீசா வசதிகளை இலகுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

(தொடர்புடைய செய்தி பக்கம் 6இல்)

# ராஜிதவுக்கு பிடியாணை

கொழும்பு, ஓக. 13

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று மீண்டும் உத்தரவிட்டது.

கிரிந்த மீன்பிடித்துறைமுகத்தில் மணல் அகழ்வு வேலைகளை சட்டவிரோதமாக கொரிய

11

## மன்னார் காற்றாலை திட்டம் ஜனாதிபதியுடன் சந்திப்பு இன்று

04

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கான காணி உறுதிகளை இலவசமாக வழங்க வேண்டும்

## கரந்தாய் கிராம வீட்டுத் திட்ட பயனாளிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 13

"இந்தியா - இலங்கை அரசுகளின் இணைந்த திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணியுடன் கூடிய வீட்டு திட்டத்தின் காணி உறுதிகளை இலவசமாக வழங்கவேண்டும்", என்று பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கரந்தாய் கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் ரவிச்சந்திரன் சுதர்ஷினி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் கூறுகையில், "எமது கிராமத்தில் 2010 ஆம் ஆண்டு 50 மாதிரி வீட்டு திட்டங்கள் வழங்கப்பட்டன. இந்த வீட்டுத்திட்டமானது காணியுடன் வழங்கப்பட்டது. இந்தத் திட்டமானது கண்டாவளை, பொன்நகர், கிளிநொச்சி என அனைத்து இடங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அனைத்து இடங்களுக்கும் காணி உறுதிப் பத்திரம் வழங்கினாலும் எமது கிராமத்துக்கு வழங்கப்படவில்லை.

நாங்கள் கட்டணம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையை காணி சீர்திருத்த ஆணைக்குழு எமக்கு விதித்தது. இந்த விடயத்தை நாங்கள் கடந்த காலத்தில் ஜனாதிபதியாக இருந்த ரணிலிடமும் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிடவும் தெரியப்படுத்தியிருந்தோம்.

நாங்கள் அனைவரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் என்பதால் பணம் செலுத்துவதற்கான வசதி எம்மிடம் இல்லை. வசதி படைத்து சிலர் கட்டணம் செலுத்தியிருந்த நிலையில் நாளை (இன்று) புதன்கிழமை அவர்களுக்கான காணி உறுதி வழங்குவதாக தெரிவித்திருந்தனர்.

இந்தக் காணி எங்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. நாங்கள் யாரிடமும் சென்று எமக்கு காணியை வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கவில்லை. எனவே, நமக்கு இலவசமாக காணி உறுதியை பெற்றுத்தர வேண்டும் - என்றார். (ஐ-05)




# சமஷ்டி தீர்வை வலியுறுத்தி ஒட்டுசுட்டானில் போராட்டம்

முல்லைத்தீவு, ஓக. 13

இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மீளப் பெறமுடியாத சமஷ்டி அதிகார பகிர்வை வலியுறுத்தி முல்லைத்தீவில் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் - புளியங்குளம் கிராமத்தில் நேற்று முன்தினம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக 100 நாட்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்தின் தொடர்ச்சியாகவே இந்தக் கவனவீர்ப்பு நடைபெற்றது.

இதில் பங்கேற்றவர்கள், "தொடர்ச்சியாக வடக்கு - கிழக்கு பகுதிகளில் அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற நில ஆக்கிரமிப்பை நிறுத்த வேண்டும், மத சுதந்திர மீறல்களை நிறுத்து, வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்பார்க்கின்ற அரசியல் தீர்வான சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு வேண்டும்", என்ற கோஷங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினர். (ஐ)

# செம்மணி மனித புதைகுழியின் கதை சிங்களத்தில் வருகின்றது

## கொழும்பில் நாளை நூல் வெளியீடு

கொழும்பு, ஓக. 13

செம்மணி மனித புதைகுழியின் கதையை கேட்டறிந்த பின்னர் சிங்களத்தில் அது குறித்து எழுத தீர்மானித்ததாக தெரிவித்துள்ள ஊடகவியலாளர் தரிந்து ஜெயவர்த்தன, கிருஷாந்தி குமாரசுவாமியின் படுகொலை, செம்மணி மனித புதை குழி குறித்த முதல்கட்ட விசாரணைகள், இலங்கையில் காணாமல்போதல், செம்மணி படுகொலையின் தற்போதைய கதை, கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஷவின் மனைவி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஆகிய விடயங்கள் இந்த நூலில் இடம் பெற்றிருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வியாழக்கிழமை (நாளை) செம்மணி என்ற நூல் வெளியிடப்படும். செம்மணிக்கு சென்ற பிறகு நாங்கள் செம்மணி மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து மேலதிக தகவல்களை பெறுவதற்காக தேசிய நூலகத்துக்குச் சென்றோம். ஆனால், செம்மணி பற்றி பெருமளவுக்கு தகவல்கள் வெளியாகவில்லை.

இதன் காரணமாகவே தரிந்து உடுவரகெதர, நாங்கள் நூலொன்றை வெளியிடுவோம் என தெரிவித்தார். நாங்கள் தொடர்ந்தும் செம்மணி குறித்து பத்திரிகைகளில், முகநூலில் எழுதி பதிவிட்டு வருகிறோம்.




யூ ரியூப்பில் பதிவிட்டுள்ளோம். முதலில், செம்மணி குறித்து ஆவணப்படத்தை வெளியிடுவோமா, காணொலி வெளியிடுவோமா என சிந்தித்து பின்னர் இறுதியாக நூலை எழுத தீர்மானித்தோம்.

இதனடிப்படையில் செம்மணி குறித்து பல தரப்புகளிடமிருந்து தகவல்களை பெற்றோம். பல ஆயிரக்கணக்கான பக்க ஆவணங்களை ஆராய்ந்தோம். வடக்கில் காணாமலாக்கப்பட்டவர்கள் குடும்பத்தவர்களுடன் பேசினோம். குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினரின் குடும்பத்தவர்களுடன் பேசினோம். இறுதியாக நாங்கள் நூலை எழுதினோம். நாளை வியாழக்கிழமை தேசிய நூலக கேட்போர் கூடத்தில் இந்த நூல் வெளியாகவுள்ளது - என்றார். (அ)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று!

யாழ்ப்பாணம், ஓக. 13

டான் தொலைக்காட்சி குழுமத்தின் ஓம் தொலைக்காட்சி நடத்தும் 'சைவம் தழைத் தோங்க...' நிகழ்ச்சி இன்று இரவு 7 மணிக்கு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் நெறிப்படுத்தலில் மாணவி நிருபா குமரகுருபரன் தேவாரம் இசைப்பார். தொடர்ந்து திருமதி சந்திரலதா துஷ்யந்தனின் நெறியாள்கையில் யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவியரான வி. விபிஷா, ஞா.ஹரனிதா, கா. புவியா, ஜெ.சைந்தவி, சு.மயூரபி, மே.சஞ்சனா, ர.பிறிஸ்சி, சு. லசிகா, சு.யக்சிகா, பா. சோபினி, யோ. லித்திகா, க.அக்சரா ஆகியோரின் நடன நிகழ்வு அரங்கேறும்.

இதைத் தொடர்ந்து "சைவ களஞ்சியம்" விநாடி வினா போட்டி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெறும். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஓக. 12

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசையரங்கு நிகழ்வில் பாட்டு - கலாநிதி சியாமளாங்கி கருணாகரன், வயலின்- திருமதி சுவர்ணாங்கி சுகந்தன், மிருதங்கம் - மகேந்திரன் லோகேந்திரன், முகர்சிங் - ஆனந்தன் மோகனபிரசாத்.

தொடர்ந்து நடன அரங்கில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை மாணவர்களின் நடனம் இடம்பெறும். இதில், நட்டுவாங்கம் திருமதி கேதுஷா கமலகுமார், பாட்டு - குகேந்திரன் அனுசன், திருமதி உமாசங்கர் புஷ்பலக்ஷ்மி, மிருதங்கம் - மகேந்திரன் லோகேந்திரன், வயலின் - இராசரத்தினம் நிரேசாசன் ஆகியோர் அணி செய் [illegible]

# யாழ். பலநோக்கு கூ. சங்கத்துக்கு புதிய பணிப்பாளர் சபை தெரிவு!



யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு புதிய பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னைய பணிப்பாளர் சபையில் நிர்வாக சீரின்மை, முறைகேடுகள் காணப்பட்டன. இதையடுத்து, பொதுச் சபை உறுப்பினர்களின் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மூலமாக முன்னைய பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டது.

இந்த நிலையில், புதிய பணிப்பாளர் சபையின் தலைவராக நீக்கிலஸ் பிரபாகரன், உபதலைவராக சண்முகலிங்கம் சுரேஷ்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், சபை உறுப்பினர்களாக ராஜ்குமார், தம்பிராசா, அன்ரனி சில்வா ஆகியோர் தெரிவாகினர்.

சங்கத்தின் தலைமை பணிமனையில் வடக்கு மாகாண கூட்டுறவு திணைக்களத்தினரின் தலைமையில் கடந்த சனிக்கிழமை புதிய பணிப்பாளர் சபை தெரிவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# வேலணையில் கால்நடையை திருடி இறைச்சியாக்கியவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், ஓக. 13

வேலணையில் வளர்ப்பு கால்நடைகளை திருடி, இறைச்சியாக்கி யாழ்ப்பாணம் நகருக்கு கடத்திய கும்பல் ஒன்று வேலணை - வங்காளவடியில் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 20 வயது இளைஞர் ஒருவர் மக்களிடம் பிடிபட்ட நிலையில், நால்வர் தப்பியோடி விட்டனர் என்று தெரிய வருகிறது.

வேலணையில் அண்மைக் காலமாக கால்நடைகள் திருட்டு அதிகமான நிலையில், இது தொடர்பில் மக்கள் கண் காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில், நேற்று அதிகாலை ஐவர் கொண்ட குழு சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியது.

அவர்களை பிடிக்க முயன்ற நிலையில் அவர்கள் தப்பியோடினர். இந்த நிலையில், சந்தேகத்துக்கு இடமான முறையில் நின்ற பட்டா வாகனம் ஒன்றையும் சந்தேகநபர் ஒருவரையும் மக்கள் பிடித்தனர். பட்டா வாகனத்தில் மாடு ஒன்று இறைச்சியாக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, சந்தேகநபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். தப்பியோடிய நால்வர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03-05)

# செல்வச் சந்நிதியானுக்கு 23ஆம் திகதி கொடியேற்றம்

வடமராட்சி, ஓக. 13

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டைமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 16 தினங்கள் பெருந்திருவிழா நடைபெறும். எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை முதல் காலை திருவிழா நடைபெறும்.

சிறப்பு திருவிழாக்களான பூங்காவன திருவிழா எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமை கைலாச வாகனத் திருவிழாவும் நடைபெறும்.

தொடர்ந்து எதிர்வரும் செப்ரெம்பர் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பை ரதத் திருவிழா மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த் திருவிழா, அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். மௌனத் திருவிழாவுடன் பெருந்திருவிழா நிறைவுறும். பெருந்திருவிழா பிரதம குருவாக சிவசிறீ சிவானந்த ஐயர் செல்லமணி ஐயர் விளங்குவார். (ஐ-02)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
13.08.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## போராட்டத்தின் பெயரால்...!

ஓர் இளைஞர் இறந்த விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு இராணுவப் பிரசன்னத்தை எதிர்த்து கடையடைப்பு போராட்டத்துக்கான அழைப்பை இலங்கை தமிழ் அரசு கட்சி விடுத்திருக்கிறது. முதலாவது விடயம் இவ்வாறான அறிவிப்புகளால் எதைச் சாதிக்க முடியும் என்பது - இரண்டாவது, இதுவரையில் இடம்பெற்ற இவ்வாறான கடையடைப்புகளால் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா என்பது.

இலங்கை தமிழ் அரசு கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இவ்வாறான கடையடைப்புகள், உணவு தவிர்ப்பு நடவடிக்கைகள் என்று பல நிகழ்வுகள் போராட்டத்தின் பெயரால் இடம்பெற்றிருக்கின்றன. இவ்வாறான நகர்வுகள் எதனையும் கொழும்பு கண்டுகொள்ளவில்லை என்பதால்தான் இளைஞர்கள் ஆயுத நடவடிக்கைகளை நோக்கி நகரத் தொடங்கினர்.

தமிழ் மிதவாதத் தரப்பினர் சாத்வீக அரசியலை முறையாகச் செய்யவில்லை என்னும் விமர்சனமும் உண்டு. அவ்வாறு செய்திருந்தால் இளைஞர்கள் வன்முறையின்மீது அதிக நாட்டம் கொள்பவர்களாக மாறியிருக்கமாட்டார்கள் என்னும் பார்வையும் உண்டு. அவ்வாறான பார்வைகளின் சரி, தவறுகளுக்கு அப்பால் அன்றைய மிதவாதிகள் சாத்வீகத்துக்காகத் தங்களை உச்சளவில் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கவில்லை என்னும் வாதத்தில் தவறில்லை.

மிதவாதிகளின் தோல்வி, ஆயுதப் போராட்டத்தின் தோல்வி என்னும் இரண்டு வகையான தோல்விகளையும் அனுபவமாகக் கொண்டிருக்கும்போதும்கூட பயனற்றுப் போன முன்னைய வழிமுறைகளிலேயே தஞ்சமடைவதை எவ்வாறு விளங்கிக் கொள்வது? ஒன்றில் எதைச் செய்வது என்று தெரியாதநிலையில் தமிழ் அரசியல் தரப்புகள் இருக்கின்றன அல்லது தங்களின் கட்சி இருக்கிறது என்பதை காண்பிப்பதற்காக அவ்வப்போது எதையாவது செய்ய வேண்டும் என்னும் நோக்கில் செயல்படுகின்றனர்.

முதலில் இவ்வாறான விடயங்கள் இடம்பெறும்போது உரிய முறையில் அரசாங்கத்துடன் பேசவேண்டும். ஆனால், அதனைத் தமிழ் அரசியல்வாதிகள் செய்வதில்லை. பாதுகாப்பு அமைச்சரோடு இது தொடர்பில் உரையாடி முறையான விசாரணைகள் இல்லை என்னும் நிலையில்தான் எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஆனால், இங்கு அவ்வாறான அணுகுமுறைகளைக் காணவில்லை.

அடையாள எதிர்ப்பு என்னும் பெயரில் எவரும் கண்டுகொள்ளாத விடயங்களை மேற்கொள்வதை விடவும் அரசாங்கத்துடன் பேசுவதும் - அவ்வாறு பேசுவதை வெளியுலகுக்கு அம்பலப்படுத்துவதும் இவ்வாறான அறிவிப்புகளை விடவும் அதிக தாக்கம்மிக்கது.

தமிழ் அரசியல் தரப்புகளின் அடிப்படையான பிரச்னை அவர்கள் எவருமே அர்ப்பணிக்கத் தயாராக இல்லை. ஆனால், மக்கள் அர்ப்பணிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். கடையடைப்புகள் அடிப்படையில் மக்களை அர்ப்பணிக்கச் சொல்லும் ஒரு நடவடிக்கைதான். ஏனெனில், ஹர்த்தலால் அரசியல்வாதிகள் பாதிக்கப்படப் போவதில்லை.

உண்மையில், போராட்டம் என்னும் சொல்லுக்கும் இவ்வாறான ஹர்த்தால் அறிவிப்புகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. போராட்டம் என்பது அரசை திரும்பிப் பார்க்கச் செய்யும் நோக்கம் கொண்டது. அரசின் விருப்பு, வெறுப்புகளை தாண்டி - அதன் மீது நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவது. நிர்ப்பந்தங்கள் இன்றி அரசு ஒருபோதும் பணியாது. வடக்கு - கிழக்கை அடிப்படையாகக் கொண்டு அறிவிக்கப்படும் இவ்வாறான ஹர்த்தால் அறிவிப்புகளுக்கு அடிபணிய வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இருக்கிறதா?

வட மாகாண குத்துச் சண்டை

## சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு 2 தங்கம் 2 வெண்கலங்கள்!


யாழ்ப்பாணம், ஓக. 13

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச் சண்டைப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 2 தங்கம், 2 வெண்கல பதக்கங்களை கைப்பற்றியது.

இந்தப் போட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரியில் நடைபெற்றது.

இதில், 16 வயது பிரிவின் 44 -46 கிலோ எடைப் பிரிவில் ரு. சுலக்சன், 20 வயது பிரிவின் 46 - 49 கிலோ எடைப் பிரிவில் ரா. விசாலகன் ஆகியோர் முதல் இடங்களை பெற்று தங்கப் பதக்கங்களை வென்றனர்.

இதேபோன்று, 20 வயது பிரிவின் 46 - 49 கிலோ எடைப் பிரிவில் உ. அநெக்ஸ் மூன்றாம் இடத்தையும் 20 வயது பிரிவின் 46 - 49



கிலோ எடைப் பிரிவில் 56 - 60 கிலோ எடைப் பிரிவில் ஆர். றொசினோ மூன்றாம் இடத்தையும் பெற்று வெண்கல பதக்கங்களை வென்றனர்.

(ஐ-05)

## வலி. மேற்கு பிரதேச சபையால் உதவி திட்டங்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஓக. 13

வலி. மேற்கு பிரதேச சபையின் உதவித் திட்டங்களை செயல்படுத்தல், பாராட்டு விழா என்பன நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

பிரதேச சபையின் தலைமை பணிமனையில் நடந்த இந்த நிகழ்வில் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு கல்விசார் ஊக்குவிப்பு, மாற்றுத்திறனாளிகளின் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதேபோன்று, உள்ளூர் எழுத்தாளர் கௌரவிப்பு, சுகாதார பொதிகள் வழங்கல், வீட்டுத்தோட்ட செய்கையாளர்களுக்கான கௌரவிப்புகள் நடைபெற்றன.

வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் ச. ஜெயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சங்கானை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் கவிதா உதயகுமார் கலந்துகொண்டார்.



அத்துடன், வலி. மேற்கு பிரதேச சபையின் உப தவிசாளர் க. இலங்கேஷ்வரன், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

(ஐ-05)

## 7 கோடி பெறுமதியான கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஓக. 13

7 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.


மறவன்புலவு - அறுகுவெளி பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலித செனவிரத்ன தலைமையிலான குழுவினர் இவர்களை கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 7 கோடி ரூபாய்க்கும் அதிகம் என்றும் கைதான இருவரும் குருநகர் பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ-03-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### மேடம்

எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். உத்தியோகத்தில் புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

### இடபம்

கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் சிறப்பாக செயல்படுவார்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

### மிதுனம்

உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

### கடகம்

கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் நீங்கி குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மைகள் நடக்கும் நாள்.

### சிம்மம்

சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

### கன்னி

உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

### துலாம்

எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

### விருச்சிகம்

புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். கனவு நனவாகும் நாள்.

### தனுசு

பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

### மகரம்

கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும்.

### கும்பம்

கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும்.

### மீனம்

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

# மன்னார் காற்றாலை திட்டம் தொடர்பில் ஜனாதிபதி - எம். பிக்கள் இன்று சந்திப்பு

வவுனியா, ஓக. 13

மன்னார் காற்றாலை திட்டம் தொடர்பில் ஜனாதிபதியுடன் இன்று 13 ஆம் திகதி விசேட சந்திப்பு நடைபெறவுள்ளதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார் காற்றாலை திட்டம் மற்றும் இல்மனைட் அகழ்வுக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், குறித்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் சந்திப்பு இடம் பெற வேண்டும் என்ற கோரிக்கை பல தரப்பாலும் விடுக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் இன்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளுடன் ஜனாதிபதி சந்திப்பொன்றை ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்துள்ளார் என ஜெகதீஸ்வரன் எம். பி. தெரிவித்தார். (எ-10)

# நல்லை ஆதீனத்தில் தெய்வீக கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக. 13

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வை நடத்தி வருகின்றது. அந்த வகையில் இன்று புதன்கிழமை அராலி கிழக்கு மலையாளங் காட்டு ஐயனார் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும் நீர்வேலி புராண இதிகாச பாடசாலை மாணவர்கள் வழங்கும் நந்தனார் இசை நாடகம் நிகழ்வும் திருமதி சுபாசினி பிரணவன், தேஜஸ்வினி பிரணவனின் திருப்புகழ் கச்சேரியும்

நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அழைப்பு விடுத் துள்ளார்.

# தெய்வீக திருக்கூட்டத்தொடர் நிகழ்வில் மாணவர்களின் இசை நடன அர்ப்பணம்

யாழ்ப்பாணம், ஓக. 13

நல்லூர் உற்சவகாலப் பெருந் திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் 16 ஆம் நாள் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று புதன்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறும்.

வேதாந்த மடம் சிறீ சிவகுருநாத பீட 8 ஆவது குருபீடாதிபதி சிறீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க சுன்னாகம் சிறீ சொர்ணவரத பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும் யாழ். மல்லாகம் மகா வித்தியாலய ஆசிரியருமான சிவ சிறீ நாகேஸ்வரக் குருக்கள் சிவசுந்தரக் குருக்களின் தலைமையில் இத்திருக்கூட்ட நிகழ்வு நடைபெறும்.

பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார் கலந்து கொள்வார்.

சங்கானை பிரதேச செயலகக் கணக்காளர் திருலோகசிங்கம் திருவருட் செல்வன் சிறப்பு விருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக வட்டு. இந்துக் கல்லூரி ஆசிரியரும் பண்ணாகம் சிறீ விசுவத்தானை முருகன் ஆலய அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியருமான அரிச்சந்திரன் முருகதாசனும் சுழிபுரம், ஓய்வுநிலை ஆசிரியர், கலாபூஷணம் ஆறுமுகம் கனகரத்தினமும் சங்கானை தெற்கு கிராம அலுவலர் கலாவித்தகர் துரைசிங்கம் சுபேஷும் கலந்து கொள்வர்.

கலை நிகழ்வுகளை சங்கானை தெற்கு மாவடி ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்குவர்.

சிறப்பு நிகழ்வுகளாக பரத ஷேத்ரா நர்த்தனாலய மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வும் மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் இசை நடன அர்ப்பண நிகழ்வும் நடைபெறும். (எ)

# திருவிளையாடல் புராண சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 13

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவசிறீ பால. திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவும் மாதந்தோறும் ஈழத்துச் சமயப் பெரியார்கள் குருபூஜை விழா தொடர் -05 சிறீ ல சிறீ அம்பலவாண நாவலர் பெரியாரின் குருபூஜை விழா தெல்லிப்பழை மாவை கலட்டி

அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

காலை 09. 00 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் ஆன்மீக விருந்தினராக தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் சமூகமாமணி, கலாநிதி பா. தனபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறீ ல சிறீ அம்பலவாண நாவலர் பெரியாரின் குருபூஜையை அடுத்து சிறப்புச் சொற்பொழிவை இளஞ்சைவப் புலவர் ச. நவநீதன் "அம்பலவாண நாவலரின் சமயப்பணி" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவும் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. மாணவர்களின் கலைநிகழ்வும் ஆன்மீக விருந்தினர் உரையும் நடைபெற்று தொடர்ந்து குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடம் நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. தொகுப்புரையை சைவப்புலவர் செ. த. குமரன் வழங்கவுள்ளார். (எ)

# 68 வயது வயோதிப பெண் படுகொலை

கிளிநொச்சி, ஓக. 13

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒன்றரை ஏக்கர் திட்டம், ஊற்றுப்புலம் பகுதியில் தனிமையில் வசித்து வந்த 68 வயது வயோதிபப் பெண் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் படுகொலை செய்யப்பட்டார்.

கொலை செய்யப்பட்டவர் விஜயரத்தினம் சரஸ்வதி என அடையாளம் காணப்பட்ட குறித்த பெண், வீட்டில் தனிமையில் இருந்தபோது இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# வெள்ளத்தில் மிதந்த பளை பொதுச்சந்தை

கிளிநொச்சி, ஓக. 13

பச்சிலைப்பள்ளி, பளை பொதுச் சந்தை நேற்று முன்தினம் பெய்த கனமழை காரணமாக வெள்ளத்தில் மிதந்தது.

பச்சிலைப்பள்ளி பொது சந்தைக்கு மக்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தினமும் வருகை தருவது வழக்கம்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை சந்தைக்கு வந்த மக்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மிகவும் நெருக்கடியை எதிர்நோக்கியை அவதானிக்க முடிந்தது.

பல காலமாக தாம் இந்தப் பிரச்னைக்கு முகம் கொடுப்பதாக மக்கள் கூறினர். (எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற, மாகாண தேர்தல்களிலும் இளைஞர்களுக்கு ஒதுக்கீடு வேண்டும்!

**மகிந்த தேசப்பிரிய வலியுறுத்து**



கொழும்பு, ஒக. 13

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஏற்பாட்டைப் போலவே, பாராளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களிலும் இளைஞர்களுக்கு அர்ப்பணிப்புடன் கூடிய ஒதுக்கீட்டை வழங்க வேண்டும் என்று முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அழைப்பு விடுத்துள்ளார்.**

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு உரையாற்றிய தேசப்பிரிய, புதிய கண்ணோட்டங்கள் தேவைப்பட்டாலும் அரசியலில் இளைஞர்களின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது.

இளைஞர்களுக்கு ஜனநாயகம் தேவை, ஜனநாயகத்திற்கு இளைஞர்கள் தேவை. அரசியல் நிறுவனங்களுக்கும், பொருத்தமானவர்களாகவும் பிரதிநிதித்துவமாகவும் இருக்க இளம் உறுப்பினர்கள் தேவை.

இந்த அழைப்பை தேர்தல் கண்காணிப்புக்கான தன்னார்வ முயற்சிகள் அமைப்பு மற்றும் நட்பு மற்றும் அன்பின் சங்கம் ஆகியன. ஆதரிக்கின்றன, அவை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, நுவரெலியா, கொழும்பு, கம்பகா, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் விழிப்புணர்வு பிரசாரங்களைத் தொடங்கும்.

இளைஞர் பிரதிநிதித்துவம் இல்லாதை எடுத்துரைப்பதிலும், அதை நிவர்த்தி செய்வதற்கான கொள்கை மாற்றங்களுக்கு ஆதரவளிப்பதிலும் இந்த முயற்சிகள் கவனம் செலுத்தும்-என்றார். (அ)

# புதிய அரசை அமைக்க சஜித் பிரேமதாஸ தயார்!

**சுஜித் சஞ்சய பெரேரா எம்.பி.**



அரசாங்கத்தை அமைக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தயாராக உள்ளார்.

கொழும்பு, ஒக. 13

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் முற்போக்கான பிரிவுகளுடன் இணைந்து புதிய அரசாங்கத்தை அமைக்கத் தயாராக உள்ளார்.

இந்தத் தகவலை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சுப்ரீம்காட் நாடகத்தால் அதிர்ந்து விட்டது போல் தெரிகிறது.

தேவை ஏற்பட்டால், அரசாங்கத்தில் உள்ள முற்போக்கான பிரிவுகளுடன் சேர்ந்து புதிய அரசாங்கத்தை அமைக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தயாராக உள்ளார்.

அமைச்சர் வசந்த சமரசிங்கவின் முயற்சி, பிரதமர் ஹரிணி அமரசூரியவை சிக்கலில் சிக்க வைத்து, அவர் ஒரு திறமையற்றவர் என்பதைக் காட்டுவதாக இருக்கலாம்-என்றார். (அ)

# கல்வி அமைச்சிலிருந்து 139 வாகனங்கள் மாயம்

கொழும்பு, ஒக. 13

2025 மே மாதத்தில் வெளியிடப்பட்ட 2024 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் சில கண்டறிதல்களை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் வெளியிட்டுள்ளார்.

அதில் கல்வி அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 139 வாகனங்கள் அமைச்சின் வசம் இல்லை என்று கூறப்பட்டுள்ளது.

2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கல்வி அமைச்சு, கல்வி சீர்திருத்தங்களுக்காக 5,219 மில்லியன் ரூபாய் செலவிட்டதையும், தேசியக் கல்வி நிறுவனம் 350 மில்லியன் ரூபாய் செலவிட்டதையும் அறிக்கை குறிப்பிடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இந்தச் சீர்திருத்தங்கள் திட்டமிட்டபடி செயல்படுத்தப்படவில்லை என்றும், சீர்திருத்தங்களுக்கான தெளிவான வரைபடம், 2015 மார்ச் 26 வரை கூட தயாரிக்கப்படவில்லை என்றும், அறிக்கை எடுத்துக்காட்டுவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறினார். (அ)

# இல்மனைட் பதப்படுத்தும் இடத்தை பொலிஸ் காவலில் வைக்க உத்தரவு

கொழும்பு, ஒக. 13

வில்பத்து தேசிய பூங்கா எல்லையை அண்மித்த பகுதியில் அமைந்துள்ள இல்மனைட் பதப்படுத்தும் இடத்தை, மேலும் விசாரணைகள் முடியும் வரை பொலிஸ் காவலின் கீழ் வைக்க புத்தளம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மிகவும் உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் மண்டலத்திற்குள், முறையான சட்ட அங்கீகாரம் இல்லாமல் அந்த இடம் செயல்படுவது தொடர்பாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைத் தொடர்ந்து, புத்தளம் மாவட்ட நீதிபதி மிகில் சிரந்த சதுருசிங்க இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த இடத்தை இயக்கும் உள்ளூர் நிறுவனம், புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் செல்லுபடியாகும் ஒப்புதல் இல்லாமல் இல்மனைட் பதப்படுத்தலை நடத்தி வருகிறது.

அதே நேரத்தில் தொல்பொருள் துறையால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளையும் புறக்கணித்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில், வலான ஊழல் தடுப்புப் பிரிவு அந்த இடத்தைச் சோதனை செய்தது.

இதனையடுத்து, நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்த அந்தப் பிரிவின் அதிகாரி ஆர். ஏ. ஜனித குமார, இல்மனைட் பதப்படுத்தல் கடுமையான சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறினார்.

சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து உண்மைகளையும் பரிசீலித்த நீதிபதி சதுருசிங்க, விசாரணைகள் முடியும் வரை அந்த இடத்தைக் பொலிஸ் காவலில் வைத்திருக்க உத்தரவிட்டார்.

அத்துடன், வழக்கைச் செப்ரெம்பர் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ)

# சபரிமலை ஐயப்பன் ஆலயத்தை இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட தலமாக பிரகடனப்படுத்த அனுமதி

கொழும்பு, ஒக. 13

சபரிமலை ஐயப்பன் ஆலயத்தை இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட புனித யாத்திரை தலமாக பிரகடனப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீண்ட காலமாக இலங்கையின் இந்து பக்தர்கள் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் அடுத்த வருடத்தின் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்தியாவின் கேரளா மாநிலத்தில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயத்துக்குச் சென்று தரிசித்து வருகின்றனர்.

தற்போது ஆண்டுதோறும் 15,000 இற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்கின்ற யாத்திரை தலமாக இந்த ஆலயம் அமைந்துள்ளது.

அதற்கமைய, சபரிமலை ஐயப்பன் ஆலயத்துக்கு இலங்கை இந்து யாத்திரிகர்களால் மேற்கொள்ளப்படுகின்ற யாத்திரையை, இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட புனித தலயாத்திரையாகப் பிரகடனப்படுத்துவதற்கும் அதற்கான வசதிகளை வழங்கவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# அரசில் எவ்வித பிளவும் இல்லை

**திலின சமரக்கோன்**

கொழும்பு, ஒக. 13

அரசாங்கத்தில் எவ்விதப் பிளவும் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் திலின சமரக்கோன் தெரிவித்தார்.

அத்துடன், அனைத்து உறுப்பினர்களும் நாட்டின் அபிவிருத்திக்காக ஒற்றுமையாகச் செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் பிளவு இருப்பதாகவும், பிரதமர் தலைமையில் தனிக் குழு செயல்படுவதாகவும் சித்தரிக்க எதிர்க்கட்சி முயற்சிப்பதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

ஆனால், அது உண்மையல்ல என திலின சமரக்கோன் தெரிவித்தார். (அ)

# பொலனறுவை மாவட்டத்தில் நெல் கொள்வனவு ஆரம்பம்!

கொழும்பு, ஒக. 13

சிறுபோக கொள்முதல் திட்டத்தின் ஒரு பகுதியாக, பொலனறுவை மாவட்டத்தில் நெல் கொள்முதல் நடவடிக்கைகளை நெல் சந்தைப்படுத்தல் சபை நேற்று முதல் ஆரம்பிக்கவுள்ளது.

அறுவடைப் பகுதியில் ஏற்பட்ட பின்னடைவுகள் காரணமாக கொள்முதல் செயல்முறை தாமதமானதாக சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்தார்.

அறுவடை தற்போது நடைபெற்று வருவதால், பொலனறுவை முழுவதும் சுமார் 15 களஞ்சியசாலைகளில் நெல் கொள்முதல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும், நெல் சந்தைப்படுத்தல் சபையின் கீழ் சுமார் 300 நெல் களஞ்சியசாலைகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நடப்பு பருவத்தில் நாடு முழுவதும் மொத்தம் 13 ஆயிரத்து 100 மெற்றிக் தொன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

## துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த யானைக்கு சிகிச்சைகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக. 13

கலாவெவ தேசிய பூங்காவின் நிகினிய பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த கலாபதிய என்ற காட்டு யானைக்கு வனஜீவராசிகள் திணைக்களம் சிகிச்சையை ஆரம்பித்துள்ளது.

35 வயதுடைய காட்டு யானையின் வலது முன் காலில் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளது.

தற்போது சிகிச்சை பெற்று வரும் யானை நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# மீகொடையில் துப்பாக்கிப் பிரயோகம் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் பலி!

கொழும்பு, ஒக. 13

மீகொடை பகுதியில் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி காயமடைந்த முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சாந்த முதுன்கொடுவ உயிரிழந்துள்ளார்.

எடிகல பகுதியில் அவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது நேற்று பகல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

காரில் வருகை தந்த சிலரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது காயமடைந்த அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 46 வயதுடைய வரே உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் ஹோமாகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பிரஜைகளை இலக்கு வைத்து நடக்கும் மனித விற்பனை நடவடிக்கை!

## மனித விற்பனைக்கெதிரான செயலணி எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 13

**இலங்கை பிரஜைகளை இலக்கு வைத்து புதிய முறையில் மேற்கொள்ளப்படும் மனித விற்பனை நடவடிக்கைகள் தொடர்பாக கிடைக்கப்பெற்றுள்ள அதிர்ச்சித் தகவல்கள் தொடர்பில் மனித விற்பனைக்கெதிரான தேசிய செயலணி பொது எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய, கிழக்கு ஆசியாவின் சில பகுதிகளில் அரசு ஒழுங்குமுறை இல்லாமல் செயல்படும் சைபர் மோசடி மையங்கள் ஊடாக பாரிய அளவில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

இந்த வலையமைப்பு உலக நாடுகளிலிருந்து 50,000 பேரை மோசடி முகாம்களுக்கு எடுத்துச் செல்ல முயற்சி செய்கின்றன. இவர்களில் இலங்கைப் பிரஜைகளும் முக்கிய இலக்காக உள்ளனர்.

இவ்வாறான புதிய ஐந்து மோசடி மையங்கள் பின்தங்கிய பிரதேசங்களில் உருவாக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அண்மைக்கால தகவல்களின் அடிப்படையிலும் அவர்கள் உருவாக்கிச் செயற்படுத்தும் சுரண்டல் முறைகளின் அடிப்படையிலும் நோக்கும்போது மனித விற்பனையாளர்கள் தவறான இணையவழி தகவல்களையும் தொழில் தேடுவோரை இலக்காக கொண்ட போலியான தொழில் வாய்ப்புக்களையும் பயன்படுத்துவது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் இன்னும் செயலில் உள்ளன. கடந்த சில வாரங்களில் பல இலங்கையர்கள் இம்முகாம்களுக்கு கடத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சில பாதிக்கப்பட்டவர்கள் டுபாயில் தொழில் செய்யும்போது இம்மோசடி மையங்களுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனைய இலங்கையர்கள் நேரடியாக இலங்கையிலிருந்து சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட போலி வேலைவாய்ப்பு விளம்பரங்கள் மூலம் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த மோசடி மையங்களில் இருந்து மீட்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்டவர்கள், தாங்கள் அனுபவித்த கொடூரமான வதைச் சம்பவங்களை வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றில் மின்சாரம் பாய்ச்சல் உள்ளிட்ட பல விதமான சித்திரவதை இடம்பெற்றுள்ளதைக் கூறி, தற்போது அங்கு சிக்கிக்கொண்டுள்ளவர்களின் பாதுகாப்பும் நலனும் குறித்து கடும் கவலையை எழுப்புகின்றனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து, சட்டப்பூர்வமான நடைமுறைகளின்படி செல்ல வேண்டும். குடும்பத்தினரும், சமூகத்தினரும் சந்தேகத்துக்கிடமான ஆட்கள் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் காணப்படின் அதனை உரிய அதிகாரிகளிடம் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். இது மக்களுக்கான ஓர் அவசர எச்சரிக்கையாகும்-என்றுள்ளது.

(அ)

# ஆசிரியர் இடமாற்றத் திட்டம் தொடர்பில் உரிய நடவடிக்கை

## பிரதமர் ஹரிணி அறிவிப்பு



கொழும்பு, ஓக. 13

ஆசிரியர் கல்வியியலாளர் சேவை மற்றும் ஆசிரியர் நிர்வாக சேவையில் பணியமர்த்தல் மற்றும் இடமாற்றம் தொடர்பில் சிறந்த முறைமையைத் தயாரிப்பதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக் குழு பிரதமரின் தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியபோது அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஆசிரியர் கல்வியியலாளர் சேவை மற்றும் ஆசிரியர் நிர்வாக சேவையில் பணியமர்த்தல், இடமாற்றம் தொடர்பில் சிக்கல் நிலைமை காணப்படுவதாக இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விசேடமாக, வட மத்திய மாகாணத்துக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட 6 அதிகாரிகளில் 5 பேர் மீண்டும் இடமாற்றம் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் குழுவில் கவனம் செலுத்தப்பட்டதுடன், அதிகாரிகளைப் பணியமர்த்தும் போது சேவையின் தேவை குறித்தும் கவனம் செலுத்தப்படவேண்டும் எனப் பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆசிரியர் கல்வியியலாளர் சேவை, ஆசிரியர் நிர்வாக சேவையில் பணியமர்த்தல் மற்றும் இடமாற்றம் தொடர்பில் இது வரை முறையான திட்டமொன்றோ பொறிமுறையொன்றோ இல்லை என்றும் தற்பொழுது அது தொடர்பில் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விசேட தேவையுடைய மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கும் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறும் பிரதமர் ஹரிணி அமரசூரிய அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

(அ)

# ரணிலால் செய்யமுடியாததை அநுரகுமார செய்துவிட்டார்!

## பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க

கொழும்பு, ஓக. 13

இலங்கையின் கடனை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மறுசீரமைத்ததாகவும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கூட இதை செய்ய முடியவில்லை என்றும் காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கடனை மறுசீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவது மட்டுமல்லாமல், 2028 ஆம் ஆண்டுக்குள் கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தொடங்கும் பொருளாதாரமாகவும் மாற்றப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

எனவே, தயவுசெய்து கிராம மக்களிடையே தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்துவதை நிறுத்துங்கள். இந்த 09 மாதங்களுக்குள், ஜனாதிபதி ஒரு நல்ல போட்டியை விளையாடியுள்ளார். பெரமுனவின் சிலர் ரொக்கெட் சம்பவத்தைப் பிடித்துக் கொண்டு வேடிக்கை பார்க்கிறார்கள். அவதானம், நீங்கள் அதே வேகத்தில் விழக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார்.

(அ)

# பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 691 பேர் கைது!

கொழும்பு, ஓக. 13

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போது குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரிலும், சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப் பொருள் தொடர்பான குற்றங்கள் தொடர்பாகவும் மொத்தம் 691 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக, 24,175 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 25 நபர்களை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

மேலும் நிலுவையில் உள்ள 375 சந்தேக நபர்கள் இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அறிக்கையின்படி, மொத்தம் 73 பேர் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

மேலும் 17 பேர் பொறுப்பற்ற முறையில் வாகனம் செலுத்தியதற்காக கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பல்வேறு போக்குவரத்து குற்றங்களை மீறிய 3,427 நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்காரர்கள், குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் மற்றும் சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருப்பவர்களைக் கைது செய்ய தீவு முழுவதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)

# இராவணனின் 19 விமானங்களை தேடும் நடவடிக்கை மீள ஆரம்பம்

கொழும்பு, ஓக. 13

சுமார் 25 இடங்களில் இராவணனால் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் 19 விமானங்களை கண்டுபிடிக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆராய்ச்சிப் பிரிவு தயாராகி வருகிறது.

அடையாளம் காணப்பட்ட 25 இடங்கள் குறித்த பல குறிப்பிட்ட விவரங்களை இந்தப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த விமானங்கள் இராவணனால் தயாரிக்கப்பட்டதாகவும், பாதரசம் மற்றும் பிற இரசாயனங்களைப் பயன்படுத்தி அவை பறக்கவிடப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குருநாகல், வாரியபொல, சிகிரியா, தம்புள்ள, பதுளை, மகியங்கனை மற்றும் அம்பாந்தோட்டை உள்ளிட்ட பிரதேசங்களிலுள்ள மலைப்பகுதிகளில் உள்ள குகைகளிலும் நிலத்தடியிலும் விமானங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் குறித்து கருத்து தெரிவித்த இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆராய்ச்சிப் பிரிவின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் முகாமையாளர் நுரங்க அதிகாரி, கார்பன் சோதனை மூலம் மட்டுமே இந்த விமானங்களின் இருப்பிடங்களை உறுதியாக தீர்மானிக்க முடியும்.

இருப்பினும், ஒரு கார்பன் சோதனைக்கு ரூ. 2 மில்லியனுக்கும் அதிகமாக செலவாகும் என்றும், அமெரிக்காவில் மட்டுமே செய்யக்கூடிய அத்தகைய சோதனைகளை நடத்துவதற்கான தொழில்நுட்ப திறன் இலங்கையில் இல்லை என்று குறிப்பிட்டார்.

இந்த விமானங்களை தேடும் திட்டம் 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதுடன், போதுமான அரச நிதி இல்லாததால் பாதியில் நிறுத்தப்பட்டது.

இந்த திட்டத்தில் பல உள்ளூர் மற்றும் இந்திய நிபுணர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில்,அடுத்த ஆண்டுக்குள் தேடலை மீண்டும் தொடங்குவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நுரங்க குறிப்பிட்டார்.

(அ)

# படகு கவிழ்ந்து விபத்து; தந்தை, மகன் மரணம்!

கொழும்பு, ஓக. 13

பொலனறுவை பராக்கிரம சமுத்திரத்தில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த அனர்த்தத்தில் தந்தையும் மகனும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெண்ணப்புவவையைச் சேர்ந்த ஒரு குழுவினர் பொலனறுவையில் உள்ள ஒரு நண்பரின் வீட்டிற்குச் சென்றிருந்தனர்.

இந்த பயணத்தின் போது அவர்கள் படகு சவாரி மேற்கொண்டபோது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

சம்பவம் நடந்த நேரத்தில் ஒன்பது பேரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததாக பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவர்கள் வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய ஆண் மற்றும் அவரது 38 வயதுடைய மகன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களின் சடலங்கள் பொலனறுவை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் குறித்து பொலனறுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலினால் மட்டுமே நாட்டை மீட்க முடியும்!

## கூறுகிறார் தலதா அத்துக்கோரள

கொழும்பு, ஒக. 13

"ஆட்சிக்கு வருவதே ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சியாகவும் இருக்கின்றது. அதற்காக தனித்தும், கூட்டணியாகவும் நடவடிக்கை எடுக்கப்படும்."-என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.



கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஒரு வருடம்தான் ஆகின்றது. அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள பிளவு மூலம் உரிய பிரதிபலனை, உரிய நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொள்ளும். நேரம்வரும்போது அதற்குரிய அறிவிப்பு வெளியிடப்படும்.

தேர்தல்மூலம்தான் ஆட்சி மாற்றம் இடம்பெற வேண்டும் என ஜனாதிபதி கூறுகின்றார். சிலவேளை பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் ஊடாக அந்த மாற்றம் இடம்பெற்றால்? எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம்.

இந்நாட்டில் பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்கக்கூடிய ஒரே தலைவர் ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்தான். அதனால்தான் அவர் இலக்கு வைக்கப்பட்டுள்ளார். நெருக்கடியின்போது நாட்டை ரணில் பொறுப்பேற்று தேர்தலை நடத்தியதால்தான் இந்த ஆட்சியாளர்களால்கூட ஆட்சிக்கு வர முடிந்தது-என்றார். (அ)

# தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர் ரேணுகா ராஜினாமா

கொழும்பு, ஒக. 13

தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து ரேணுகா ஏக்கநாயக்க இராஜினாமா செய்துள்ளார்.

ரேணுகா ஏக்கநாயக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளராக இருந்த சமன் ஏக்கநாயக்கவின் மனைவி ஆவார்.

அவரது இராஜினாமா கடிதம் அரசியலமைப்புச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பில் வாக்குமூலம் அளிக்க சமன் ஏகநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிதிக் குற்றப் பிரிவுக்கு அழைக்கப்பட்ட சில நாட்களுக்குப் பின்னர் ரேணுகா ஏக்கநாயக்க தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

இதேவேளை, பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து தேசபந்து தென்னக்கோனை நீக்குவதற்காக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை சபாநாயகர், ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள நிலையில், பொலிஸ்மா அதிபர் பதவியும் வெற்றிடமாகியுள்ளது.

அதன்படி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் தற்போது இரு உயர் பதவிகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாணவரை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை!

## இருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஒக. 13

மீகொடை, ஒவிட்டிகம பிரதேசத்தில் போதைப்பொருட்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் மீகொடை பொலிஸாரால் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீகொடை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மீகொடை, ஒவிட்டிகம பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், வாடகை வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இரண்டரை கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருந்த போதை மாத்திரைகளும் குறித்த வாடகை வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# கார்த்திக் சிதம்பரம் ஜீவனுடன் சந்திப்பு!

கொழும்பு, ஒக. 13

இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தமிழகம் சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி பி. சிதம்பரத்தை அண்மையில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தியா பயணத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டு விஜயத்தின்போது சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினரும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரும், தமிழ்நாடு ரென்னிஸ் சங்கம் துணைத் தலைவருமான திருவாளர் கார்த்தி பி. சிதம்பரத்தை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

சிவகங்கை தொகுதியின் மானகிரியில் இடம்பெற்ற இச் சந்தந்திப்பு மிகவும் அர்த்தமுள்ளதாக அமைந்ததாக கருத்து தெரிவித்த ஜீவன் தொண்டமான், இந்தியா-இலங்கை பரஸ்பர விடயங்கள் குறித்தும், மேலும் பல முக்கிய விடயங்கள் சார்ந்து இருவரும் பயனுள்ள கலந்துரையாடலை மேற்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

# தங்க பிஸ்கட்கள் வைத்திருந்த ஒருவர் கைது!

கொழும்பு, ஒக. 13

சுமார் 11 ரூபாய் கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள தங்க பிஸ்கட்களுடன் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 1 கிலோ 2.66 கிராம் தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

டுபாயிலிருந்து வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்யும் போர்வையில் அவை நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாகன உதிரி பாகங்களுக்கு விதிக்கப்பட்ட வரியை சுங்க அதிகாரிகளுக்கு செலுத்திவிட்டு திரும்பி வந்தபோது, சந்தேகத்தின் பேரில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர் சிலாபத்தில் வசிக்கும் 58 வயதுடையவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பேருந்து-டிப்பர் நேருக்கு நேர் மோதி விபத்து; 26 பேர் காயம்!

கொழும்பு, ஒக. 13

கொழும்பு-மட்டக்களப்பு பிரதான வீதியின் மின்னேரியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பட்டுஓயா பகுதியில் இடம்பெற்ற வகான விபத்தில் 26 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தானது நேற்று அதிகாலை 3.30 மணியளவில் பட்டுஓயா பாலத்துக்கு அருகே இடம்பெற்றுள்ளதாக மின்னேரியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுருஓயாவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்து ஒன்று, எதிர்த்திசையில் வந்த டிப்பருடன் மோதுண்டு இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் பொலனறுவை, மின்னேரியா மற்றும் ஹிங்குராக்கொடை வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பவம் குறித்து மின்னேரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஒகஸ்ட் முதல் 10 நாட்களில் மட்டும் 77,482 சுற்றுலா பயணிகள் வருகை!

கொழும்பு, ஒக. 13

2025 ஒகஸ்ட் மாதத்தின் முதல் 10 நாட்களில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 77,482 ஆக பதிவாகியுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள தரவுகளின்படி, இந்தியாவில் இருந்து மொத்தம் 13,511 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இது 17.4 வீதம்ஆகும். மேலும், ஒகஸ்ட் மாதத்தில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 8,691 பேரும், இத்தாலியிலிருந்து 6,036 பேரும், சீனாவிலிருந்து 5,659 பேரும், பிரான்சிலிருந்து 5,518 பேரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதற்கிடையில், ஒகஸ்ட் மாதத்திற்கான அண்மையபுள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டதன் மூலம், 2025 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,445,770 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில், 292,633 பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள், 140,068 பேர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் 116,895 பேர் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

ஜூலை மாதத்தில் மொத்தம் 200,244 வெளிநாட்டினர் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இது ஜூலை 2024 தரவுகளுடன் ஒப்பிடும்போது 6.6 வீத அதிகரிப்பாகும். (அ)

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தீ!

கொழும்பு, ஒக. 13

மொனராகலை, வெள்ளவாய, தெலுல்ல பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது.

தீப்பற்றியவுடன் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் உடனடியாக தீயைக் கட்டுப்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிர்ஷ்டவசமாக தீ விபத்தில் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு 1,713 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு



மட்டக்களப்பு, ஓக. 13

**கிழக்கு மாகாணத்தின் வளர்ச்சிக்காக 1713 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

கிழக்கு மாகாண முதலமைச்சின் மாதாந்த முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டம் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில் கிழக்கு மாகாண முதலமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், முதலமைச்சுக்குச் சொந்தமான நிறுவனங்களால் மட்டும் கிழக்கு மாகாணத்தின் வளர்ச்சிக்காக 1713 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த நிதியைக் கொண்டு செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் முதலமைச்சால் நிர்வகிக்கப்படும் 45 உள்ளூராட்சி நிறுவனங்களின் (நகராட்சிகள், நகர சபைகள், பிரதேச சபைகள்) மற்றும் உள்ளூராட்சித் துறை, கிராமப்புற தொழில்துறைத் துறை, சமூக சேவைகள் துறை மற்றும் சுற்றுலாப் பணியகம் ஆகியவற்றின் திட்ட முன்னேற்றம் மதிப்பாய்வு செய்யப்பட்டது. இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்துத் திட்டங்களையும் முடிக்குமாறு ஆளுநர் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவுறுத்தினார்.

"உங்கள் சாலை அடையாளத்தை அறிந்து கொள்ளுங்கள்" என்ற தலைப்பில் முதலமைச்சினால் தொகுக்கப்பட்ட வீதி அடையாளங்கள் குறித்த புத்தகமும் இங்கு வழங்கப்பட்டது.

இதில் மாகாண பிரதம செயலாளர் தலங்கம மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)



# திருமலை துறைமுகத்தில் இந்திய கடற்படை கப்பல்

திருகோணமலை, ஓக. 13

இந்திய கடற்படைக் கப்பலான "ஐ.என்.எஸ். ரனா" திருகோணமலை துறைமுகத்துக்கு உத்தியோகபூர்வ பயணமாக வந்துள்ளது. திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ள இந்தக் கப்பல் 147 மீற்றர் நீளம் கொண்டதுடன் 300 அங்கத்துவ குழுவினரைக் கொண்டுள்ளது. மேலும் இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரியாக கே.பீ. சிறீசன் பணியாற்றுகின்றார்.

நாடுகளின் கடற்படைகளுக்கு இடையே நல்லுறவை மேம்படுத்துவதற்காக இலங்கை கடற்படை ஏற்பாடு செய்யும் பயிற்சி மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளில் அதன் குழுவினர்கள் பங்கேற்பார்கள். அத்துடன் தீவில் உள்ள பல சுவாரஸ்யமான இடங்களைப் பார்வையிடவும் திட்டமிட்டுள்ளனர்.

மேலும் இலங்கை இராணுவத்தினருக்கான ஒரு யோகா நிகழ்ச்சியை நடத்துவதற்கும் திருகோணமலையில் உள்ள சிறப்பு படகுப் படைத் தலைமையகத்திலும் கப்பலிலும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் நாளை வியாழக்கிழமை இந்தியா திரும்பவுள்ளது. (எ)

# கல்முனை பிரதேச செயலகத்தில் டிஜிற்றல் சேவை பிரிவு திறப்பு



கல்முனை, ஓக. 13

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேச செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள டிஜிற்றல் - முன்னரங்கு சேவை பிரிவு உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை பிரதேச செயலாளர் எம். அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம கலந்து கொண்டு டிஜிற்றல் சேவை பிரிவை திறந்து வைத்தார். (எ)

# வியாபார விளம்பர பலகைகளை வீதிகளில் வைத்தால் நடவடிக்கை

கல்முனை, ஓக. 13

வியாபார நிலையங்களின் விளம்பர பலகைகளை வீதிகளில் வைத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்முனை பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் வாகனப் போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டத்துக்கு இடையூறு ஏற்படுவதால் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு கல்முனை பொலிஸார் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளுமாறு அறிவித்தல் விடுத்துள்ளனர்.

வியாபார பொருட்கள் மற்றும் வியாபார நிலையங்களின் விளம்பர பலகைகளை வீதிகளில் வைத்தல், வாகனங்களை நீண்ட நேரமாக வீதிகளில் நிறுத்தி வைத்தலும் மற்றும் திருத்த வேலை செய்தலும் உணவுப் பொருட்களையும் மற்றும் பழ வகைகளையும் பாதுகாப்பற்ற முறையிலும் திறந்த நிலையிலும் விற்பனை செய்தல், கால்நடைகளை பாதுகாப்பற்ற நிலையில் வீதிகளில் நடமாடவிடல், கழிவு நீர்களை வீதிகளில் விடுதல் போன்ற இவ்வாறான குற்றச் செயல்களை தொடர்ச்சியாக செய்து வருவதால் பொது மக்கள் பலவகையான சிரமங்களை எதிர் கொள்கின்றார்கள். ஆகையால், இவ்வாறான செயல்பாடுகளில் இருந்து தவிர்த்து கொள்ளுமாறும் பொதுமக்கள் சிரமங்கள், அசௌகரியங்கள் இன்றி பயணிப்பதற்கு உதவுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றங்களை தாங்களே இனங்கண்டு குறித்த குற்றங்களில் இருந்து விலகிக் கொள்ளுமாறும் தொடர்ச்சியாக இவ்வாறான விடயங்களை மேற் கொள்பவர்களுக்கு எதிராக 15 ஆம் திகதிக்கு பின்னர் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத் தருகின்றோம் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வீட்டிலும் வியாபார நிலையங்களிலும் பொருத்தப்பட்டிருக்கும் சி.சி.ரிவி கமராக்கள் உரிய முறையில் செயல்படுகின்றனவா என்பதனையும் பரீட்சித்து நடைமுறையில் வைத்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-01)

# டச்சுக்குடா கடற்கரையில் சட்டவிரோத கடை அகற்றம்

திருகோணமலை, ஓக. 13

டச்சுக்குடா கடற்கரையில் பௌத்த விகாரைக்கு அண்மையில் சட்டவிரோதமான முறையில் நிறுவப்பட்ட கடையை உடைத்து அகற்றும் அறிவித்தலை திருகோணமலை மாவட்ட கரையோர பாதுகாப்புத் திணைக்களம் நேற்று செவ்வாய்க்கிழமை கடைவாசலில் ஒட்டியுள்ளது.

அறிவித்தலின் படி, நேற்று முதல் 14 நாட்களுக்குள் அந்த கடையை அமைத்தவர்கள் தாமாகவே கட்டுமானங்களை உடைத்து அகற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த காலக்கெடு முடிந்த பின்னரும் நிர்மாணங்கள் அகற்றப்படாவிட்டால், கரையோர பாதுகாப்புத் திணைக்களம் அவற்றை உடைத்து அகற்ற நடவடிக்கை எடுக்கும் என்று அறிவித்தலில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த இடத்தில் தற்காலிக கடை ஒன்றை அமைப்பதற்கு மட்டுமே தமது திணைக்களம் உரிமையாளருக்கு அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் அந்த அனுமதியை பயன்படுத்தி சட்டத்துக்கு முரணாக நிரந்தர கட்டுமாணம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனை அகற்றுமாறு இதற்கு முன்னர் உரிய முறையில் உரிமையாளருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே உடைத்து அகற்றும் அறிவித்தல் வழங்கப்பட்டதாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட அதிகாரி தெரிவித்தார்.

மேலும், கடை உரிமையாளர் விரும்பின், இந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்ய சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளருக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# அனர்த்த முகாமைத்துவம் குறித்து திருகோணமலையில் விழிப்புணர்வு

திருகோணமலை, ஓக. 13

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் துறைசார் உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ. சிறீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளராக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மாவட்ட பிரதிப் பணிப்பாளர் கே. சுகுணதாஸ் கலந்து சிறப்பித்தார். இதில் உதவிப் பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய மட்ட அமைப்புகளின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அனர்த்த காலங்களின் போது எவ்வகையான சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். அதனை மக்கள் மத்தியில் எவ்வாறு கொண்டு செல்வது தொடர்பிலும் ஆபத்தை விளைவிக்க கூடிய அனர்த்தங்களின் போது முற்காப்பு நடவடிக்கைகள், அனர்த்தங்களின் போதான மற்றும் அதன் பின்னரான நடவடிக்கைகள் தொடர்பிலும் பல விடயங்கள் இதன்போது தெளிவூட்டப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்து நதியில் அணை கட்டினால் 10 ஏவுகணைகளால் தகர்ப்போம்!

## அமெரிக்காவில் வைத்து இந்தியாவுக்கு பாகிஸ்தான் இராணுவ தளபதி மிரட்டல்



வாஷிங்டன், ஒக. 13

**சிந்து நதியின் குறுக்கே இந்தியா அணை கட்டினால் அதனை 10 ஏவுகணைகளால் தாக்கி அழிப்போம் என்று பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஆசிம் முனீர் எச்சரித்துள்ளார்.**

அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஆசிம் முனீர் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் இவ்வாறு குறிப்பிட்டார். "சிந்து நதியின் குறுக்கே இந்தியா அணை கட்டப்படும் என்றுதான் நாங்கள் காத்திருக்கிறோம். அவ்வாறு அணை கட்டினால் 10 ஏவுகணைகளால் அதை அழிப்போம். சிந்து நதி இந்தியர்களின் குடும்பச் சொத்து அல்ல. எங்களிடம் ஆயுதப் பற்றாக்குறை ஏதுமில்லை"- என்றார்.

மேலும், எதிர்காலத்தில் உலகின் பாதி நாடுகளை அழித்து விடுவோம் என்ற தொனியிலும் பாகிஸ்தான் இராணுவத் தளபதி பேசியுள்ளார். ஏற்கனவே கூடுதல் வரி விதிப்பால் இந்தியா - அமெரிக்கா இடையே பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்த நிலையில், அமெரிக்க மண்ணில் இருந்தவாறு இந்தியாவுக்கு பாகிஸ்தான் தளபதி மிரட்டல் விடுத்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலையடுத்து, பாகிஸ்தானுக்கு தக்க பாடம் புகட்ட முடிவு செய்த இந்தியா, அந்த நாட்டுடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது. (எ)

இஸ்ரேல் இராணுவத் தாக்குதலில்

# காஸாவில் அல் ஜசீராவின் 5 ஊடகவியலாளர்கள் பலி

காஸா, ஒக. 13

காஸாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் சர்வதேச ஊடகமான அல் ஜசீராவின் 5 ஊடகவியலாளர்கள் உயிரிழந்தனர்.

காஸா நகரின் அல் ஷிப்பா மருத்துவமனைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர்களுக்கான முகாம் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் ஊடகவியலாளரான அனஸ் அல் ஷெரிப் உள்ளிட்ட 7 பேர் உயிரிழந்த நிலையில் அவர்களில் 5 பேர் அல் ஜசீரா ஊடகவியலாளர்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு பின்னர் இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், அனஸ் அல் ஷெரிப்பை இலக்கு வைத்தே குறித்த தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளது.

அவர் ஹமாஸின் பயங்கரவாத குழுவொன்றின் தலைவராக செயல்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த நபர் ஊடகவியலாளர் எனும் போலியான வேடத்தில் செயல்பட்டுள்ளதாகவும் அவர் பயங்கரவாத அமைப்பின் முக்கிய பொறுப்பில் தலைமை வகித்தமைக்கான ஆதாரங்களை தமது புலனாய்வுப் பிரிவினர் உறுதிப்படுத்திய பின்னரே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

22 மாதங்களாக இடம்பெற்று வரும் காஸா போரில் ஊடகவியலாளர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட சமீபத்திய தாக்குதல் இதுவாகும்.

இந்தப் போரில் இதுவரை சுமார் 200 ஊடகவியலாளர்கள் உயிரிழந்ததாக ஊடக கண்காணிப்பு குழுக்கள் தெரிவித்துள்ளன.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுக்கு அல் ஜசீரா ஊடக நிறுவனம் மற்றும் பல்வேறு நாடுகளும் தமது கண்டனங்களை வெளிப்படுத்தியுள்ளன. (எ)

# காஸாவில் ஹமாஸ் இயக்கத்தின் வேலையை முடிப்பதே நோக்கம்!

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு



டெல் அவிவ், ஒக. 13

காஸாவை ஆக்கிரமிப்பது எங்கள் நோக்கமல்ல. ஹமாஸ் இயக்கத்தை ஒழித்துக்கட்டி, வேலையை முடிப்பதே நோக்கம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் இராணுவத்துக்கும் காஸாவில் உள்ள ஹமாஸ் இயக்கத்தினருக்கும் இடையே பல மாதங்களாக மோதல் இடம்பெற்று வருகிறது. இந்த நிலையில், காஸா மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது. இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. இது குறித்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறியதாவது:-

"காஸா பகுதியில் பொது மக்கள் கொல்லப்படுதல், சேதம், உதவிப்பொருட்கள் கிடைக்காதது என அனைத்துக்கும் ஹமாஸ் இயக்கம்தான் காரணம். காஸாவில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை குறுகிய காலத்தில் முடிக்கத் திட்டமிட்டுள்ளோம். ஹமாஸ் இயக்கத்தை ஒழித்துக்கட்டி, வேலையை முடிப்பதை தவிர வேறு வழியில்லை.

காஸாவை ஆக்கிரமிப்பது எங்கள் நோக்கமல்ல. அதை விடுவிப்பதுதான் இலக்கு. ஆனால், இஸ்ரேலுக்கு உள்ளேயும் வெளியேயும் சர்வதேச அளவில் பொய் பிரசாரம் நடைபெற்று வருகிறது. காஸாவை இராணுவமயத்தில் இருந்து விடுவித்தல், இஸ்ரேல் இராணுவம் பாதுகாப்பை மேற்கொள்ளுதல், இஸ்ரேல் அல்லாத சிவில் நிர்வாகம் பொறுப்பேற்றல் ஆகியவைதான் எங்கள் இலக்குகள்.

நிறைய வெளிநாட்டு ஊடகவியலாளர்களை அழைத்து வந்து காட்டுமாறு இஸ்ரேல் இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளேன். பணயக் கைதிகளை விடுவித்து, ஆயுதங்களை ஹமாஸ் அமைப்பினர் ஒப்படைத்தால் காஸாவில் நாளையே போர் முடிந்துவிடும்"- என்றார். (எ)

# உக்ரைன் - ரஷ்யா இடையே மிக விரைவில் போர் நிறுத்தம்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நம்பிக்கை

வாஷிங்டன், ஒக. 13

உக்ரைன் - ரஷ்யா இடையே மிக மிக விரைவில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போரானது 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கான படையினர் உயிரிழந்தனர். எனினும், போர் முடிவுக்கு வராமல் நீண்டு கொண்டே செல்கிறது. இந்த நிலையில், நடப்பு ஆண்டு ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பொறுப்பேற்ற பின்னர், இரு நாடுகளிடையேயான போரை முடிவுக்கு கொண்டு வரும் மத்தியஸ்தம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த விவகாரத்தில் புடின் சற்று இறங்கி வந்துள்ளார். இதன்படி, அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி புடின் நேரில் சந்தித்து பேசுகின்றனர். இந்தச் சந்திப்பில் உக்ரைன் அமைதி ஒப்பந்தம் பற்றி இருவரும் ஆலோசனை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை ட்ரம்ப், அவருடைய சமூக வலைத்தள பக்கத்தில் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில், வெள்ளை மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ட்ரம்ப் பேசும்போது அவரிடம், அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையே இயல்பான வர்த்தகம் இருக்குமா? என கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த ட்ரம்ப், ரஷ்யா மிக பெரிய நிலப்பரப்பை கொண்டுள்ளது. ரஷ்யா போரில் ஈடுபடும் நாடு. அதனையே அவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் நிறைய போர்களில் ஈடுபட்டுள்ளனர். என்னுடைய நண்பர் ஒருவர், ரஷ்யா கடுமை வாய்ந்த நாடு. ஏனெனில், அது தொடர்ந்து போரில் ஈடுபடக் கூடியது- என்றார்.

அதனால், போருக்குப் பதிலாக புடின் வர்த்தகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவாரா? என்ற கேள்வியுள்ளது. விளாடிமிர் புடினுடன் நாங்கள் சந்திப்பு ஒன்றை நடத்த இருக்கிறோம். அந்தக் கூட்ட முடிவில், அவ்வளவு ஏன் முதல் 2 நிமிடங்களில் ஒப்பந்தம் ஏற்படுமா? இல்லையா? என்பது எனக்கு சரியாக தெரிந்து விடும் என ட்ரம்ப் கூறினார்.

எனினும், போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படும் என எதிர்பார்த்து இருக்கிறேன். இரு தரப்புக்கும் இடையே சிறந்த ஒப்பந்தம் ஒன்று ஏற்படும் என நான் பார்க்க விரும்புகிறேன் என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார். ஐரோப்பிய தலைவர்கள் பலரும் என்னை அதிகம் நம்பியுள்ளனர். என்னால் அது முடியவில்லை என்றால், கடைசி நபர் உயிரிழக்கும் வரை இந்த விவகாரத்தில் தீர்வு ஏற்படாது- என்றார்.

இந்த கூட்டம் நல்ல முறையில் நடக்க போகிறது. நாம் இன்னும் முன்னேறி செல்வோம். ஒப்பந்தம் ஏற்படுத்துவோம். மிக மிக விரைவில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படும். அதனை உடனடியாக பார்க்க நான் விரும்புகிறேன் என்றும் ட்ரம்ப் கூறினார். (எ)

# காஸாவை ஆக்கிரமிக்கும் திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு

## இஸ்ரேல் தலைநகரில் மக்கள் ஆர்ப்பாட்டம்

டெல் அவிவ், ஒக. 13

காஸாவை முழுமையாக ஆக்கிரமிக்கும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் திட்டத்துக்கு எதிராக தலைநகர் டெல் அவிவில் ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

இஸ்ரேலிய பிரதமர் இராணுவ நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும், பணயக்கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

காஸா நகரை முழுமையாக கைப்பற்றும் நடவடிக்கை இராணுவ ரீதியிலான தீர்மானம் இல்லை. இது நாங்கள் மிகவும் நேசிக்கும் மக்களுக்கான மரண தண்டனை என ஹமாஸிடம் பணயக்கைதியாக உள்ள ஒம்ரி மிரானின் மனைவி ஆர்ப்பாட்டத்தில் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இதில் உடனடியாக தலையிட வேண்டும் எனவும் அவர் மன்றாடினார்.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் பணயக்கைதிகளின் படங்களுடன் காணப்பட்டனர். இஸ்ரேலிய அரசாங்கம் குறித்து கோபத்தை வெளிப்படுத்தியதுடன், பெஞ்சமின் நெதன்யாகு மேலும் யுத்தத்தை தீவிரப்படுத்துவதை அமெரிக்க ஜனாதிபதி தடுத்து நிறுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

இஸ்ரேலிய இராணுவத்தினரால் கொல்லப்பட்ட காஸா சிறுவர்களின் படங்களுடனும் சில ஆர்ப்பாட்டக்காரர்கள் காணப்பட்டனர். (எ)

# பலஸ்தீன அரசுக்கு ஆஸி அங்கீகாரம்

சிட்னி, ஒக. 13

ஹமாஸ் அமைப்பு பலஸ்தீன அரசின் நிர்வாகத்தில் பங்கேற்கக்கூடாது என்ற நிபந்தனையுடன் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் எதிர்கால அமர்வில் பலஸ்தீன அரசை அங்கீகரிக்கவுள்ளதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

இரண்டு தேசக்கொள்கை மத்திய கிழக்கில் வன்முறையை நிறுத்துவதற்கு மனித குலத்துக்கான சிறந்த நம்பிக்கை என்று அவுஸ்திரேலிய பிரதமர் அன்ரனி அல்பெனிஸ் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன, இஸ்ரேலிய தேசங்களை உருவாக்குவதற்கான 181ஆவது தீர்மானத்துக்கு ஆதரவாக முதலில் கையை உயர்த்திய நாடு அவுஸ்திரேலியா என அன்ரனி அல்பெனிஸ் கூறினார்.

77 வருடங்களின் பின்னர் இந்த தீர்மானம் குறித்து சில தரப்பினர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்காக இனிமேலும் காத்திருக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவக்களைவு, பொதுத் தேர்தல்களை நடத்துதல், இஸ்ரேலின் இருப்பை அங்கீகரித்தல் போன்ற வாக்குறுதிகளை பலஸ்தீன அதிகார சபை வழங்கியுள்ளதாகவும் அவுஸ்திரேலிய பிரதமர் தெரிவித்தார்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவில் உள்ள யூத சமூகத்தினர் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் இந்த முடிவை கண்டித்துள்ளனர். பாலியல் வன்முறை மற்றும் கொலைகளில் ஈடுபட்டவர்களுக்கு தொழில்கட்சி அரசாங்கம் வெகுமதி வழங்கவுள்ளதாகவும் அவர்கள் சாடியுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்சினாட்டி ரென்னிஸ்: ரொமி அதிர்ச்சி தோல்வி


சின்சினாட்டி, ஒக. 13

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் போட்டியில் அதிர்ச்சி தோல்வி கண்ட ரொமி போல் தொடரிலிருந்து வெளியேறினார்.

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் முன்னணி வீரரான ரொமி போல் - பிரான்ஸின் அட்ரியன் மன்னாரினோ உடன் மோதினார்.

இந்தப் போட்டியின் முதல் செற்றை 7-5 என்ற புள்ளிக் கணக்கில் ரொமி போல் கைப்பற்றினார். இதையடுத்து நடைபெற்ற இரண்டாவது மற்றும் மூன்றாவது செற்களில் அபாரமாக செயல்பட்ட அட்ரியன் மன்னாரினோ 6-3, 6- 4 என்ற செற் கணக்கில் ரொமி போலை வீழ்த்தினார்.

இறுதியில் அட்ரியன் மன்னாரினோ 5-7, 6-3, 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். அதிர்ச்சி தோல்வி கண்ட ரொமி போல் தொடரில் இருந்து வெளியேறினார். (எ)



# ‘எதுவும் என் கையில் இல்லை’




சென்னை, ஒக. 13

இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின், ஐ.பி.எல். தொடரில் தனது எதிர்காலம் குறித்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். இதனால், அவர் அணியில் இருந்து விடுவிக்கப்படலாம் என்ற ஊகங்கள் எழுந்துள்ளன. இது குறித்து அவர் கூறுகையில்,

“ஐ.பி.எல். ஏலத்துக்கு முன்பாக ஓர் அணியில் உள்ள வீரர், தன்னை தக்க வைக்கலாமா அல்லது விடுவிக்கலாமா என்பதை அணி நிர்வாகத்திடம் தெரிவிப்பதற்கான உரிமை உள்ளது. ஒவ்வொரு வீரருக்கும் நிச்சயம் அது குறித்து தெளிவுபடுத்தப்பட வேண்டும். இந்த விவகாரம் எதுவும் என் கையில் இல்லை. நான் அது தொடர்பாக தெளிவுபடுத்துமாறு கேட்டுள்ளேன்.

நானும், சஞ்சு சாம்சனும் அணி மாறுகின்றோம் என யார் சொன்னார்கள் என்று தெரியவில்லை. ஆனால், அதை நாங்கள் சொல்லவில்லை“- என்றார். (எ)

# சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ்: மேடிசன் கீஸ் அபார வெற்றி



சின்சினாட்டி, ஒக. 13

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரின் 4ஆவது சுற்றுக்கு மேடிசன் கீஸ் முன்னேறினார்.

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான மேடிசன் கீஸ் - ஜப்பானின் அயோய் இடோ உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி புள்ளிகளை பெற்ற மேடிசன் கீஸ் 6-4, 6-0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# “கிண்ணத்தை ஏந்துவோம் உறுதியாக நம்புகிறேன்”

மும்பை, ஒக. 13

உலகக் கிண்ணத்தை கையில் ஏந்துவோம் என்று உறுதியாக நம்புகிறேன் என்று இந்திய அணியின் தலைவி ஹர்மன்ப்ரீத் கவுர் தெரிவித்தார்.

13ஆவது மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 30ஆம் திகதி முதல் நவம்பர் 2ஆம் திகதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ளது. இந்தியாவில் மகளிர் உலகக் கிண்ணத்தை அரங்கேற்றுவது இது 4ஆவது முறையாகும்.

இதில் இலங்கை, இந்தியா, நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இந்தியாவில் பெங்களூரு, கௌகாத்தி, விசாகப்பட்டினம், இந்தூரிலும், இலங்கையில் கொழும்பிலும் மொத்தம் 31 ஆட்டங்கள் நடத்தப்படுகின்றன. பாதுகாப்பு பிரச்னை காரணமாக பாகிஸ்தான் அணிக்குரிய அனைத்து ஆட்டங்களும் இலங்கையில் நடைபெறுகின்றன. செப்ரெம்பர் 30ஆம் திகதி பெங்களூருவில் நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் இந்தியா- இலங்கை அணிகள் மோதுகின்றன.

உலகக் கிண்ணப் போட்டி தொடங்குவதற்கு இன்னும் 50 நாட்கள் மட்டுமே இருப்பதை குறிக்கும் நிகழ்ச்சி மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஐ.சி. சி. தலைவர் ஜெய்ஷா, தலைமை செயல் அதிகாரி சஞ்ஜோக் குப்தா, இந்திய முன்னாள் வீரர் யுவராஜ்சிங், முன்னாள் வீராங்கனை மிதாலிராஜ், இந்திய மகளிர் அணியின் தலைவி ஹர்மன்பிரீத் கவுர், துணைத் தலைவி ஸ்மிருதி மந்தனா, ஜெமிமா ரோட்ரிக்ஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில், ஹர்மன்பிரீத் கவுர் கூறியதாவது, “உள்ளூர் ரசிகர்களின் முன் விளையாடுவது எப்போதும் சிறப்பு வாய்ந்தது. இந்த முறை எங்களது 100 சதவீத பங்களிப்பை வழங்கி தடைகளை தகர்த்தெறிந்து கிண்ணத்தை கையில் ஏந்துவோம் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்தத் தருணத்துக்காகத்தான் ரசிகர்கள் காத்திருக்கிறார்கள். உலகக் கிண்ணப் போட்டிகள் எப்போதும் சிறப்பு வாய்ந்தவை. அதில் தேசத்துக்காக விசேடமாக ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். சாதனை நாயகன் யுவராஜ் சிங்கை (2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியின் தொடர்நாயகன்) பார்க்கும் போதெல்லாம் எனக்கு நிறைய உத்வேகம் கிடைக்கிறது.

உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்பாக அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடவுள்ளோம். அவர்களுக்கு எதிராக விளையாடுவது எப்போதும் சவாலானது. ஏனெனில் அவர்கள் கடும் போட்டி அளிக்கக்கூடியவர்கள். இதன் மூலம் நாங்கள் எந்த நிலையில் இருக்கிறோம், ஓர் அணியாக எந்தப் பகுதியில் முன்னேற்றம் காண வேண்டும் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

இந்தத் தொடர் எங்களுக்கு நிச்சயம் அதிக நம்பிக்கையை தரும். எங்களது பயிற்சி முகாமில் நிறைய உழைப்பை கொட்டுகிறோம். அதற்குரிய பலன் கிடைத்து வருகிறது. அண்மையில் இங்கிலாந்துக்கு எதிரான தொடரை கைப்பற்றினோம். இதனால் எங்களது நம்பிக்கை உயர்ந்த நிலையில் இருக்கிறது. கடந்த சில வருடங்களாக எப்படி விளையாடுகிறோமோ அதைத் தொடர விரும்புகிறோம்”- என்றார். (எ)

# சின்சினாட்டி ரென்னிஸ்: ரெய்லர் முன்னேற்றம்

சின்சினாட்டி, ஒக. 13

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரில் ரெய்லர் பிரிட்ஸ் 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

இந்த ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் முன்னணி வீரரான ரெய்லர் பிரிட்ஸ் - இத்தாலியின் லோரென்சோ சோனெகோ உடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய ரெய்லர் பிரிட்ஸ் 7-6 (7-4), 7-5 என்ற செற் கணக்கில் லோரென்சோ சோனெகோவை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)





# தொடர்ச்சியாக 9 வெற்றி அவுஸ்திரேலியா அசத்தல்

டார்வின், ஒக. 13

ரி - 20 போட்டிகளில் தொடர்ச்சியாக 9 வெற்றிகள் பெற்று அவுஸ்திரேலிய அணி அசத்தியுள்ளது.

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா இடையிலான 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரின் முதல் போட்டி டார்வினில் நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலியா 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ரி - 20 கிரிக்கெட்டில் அவுஸ்திரேலியா தொடர்ச்சியாக பெற்ற 9ஆவது வெற்றி இதுவாகும். இதற்கு முன்னர் தொடர்ச்சியாக 8 போட்டிகளில் வெற்றி பெற்றதே அவுஸ்திரேலியாவின் அதிகபட்சமாக இருந்தது. தற்போது முதல் முறையாக 9 தொடர் வெற்றிகளை பெற்று அசத்தியுள்ளது.

இந்த பட்டியலில் ஐ.சி.சியின் முழு உறுப்பினர் அந்தஸ்து கொண்ட நாடுகளில் இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் தொடர்ச்சியாக தலா 12 வெற்றிகளை கண்டு முதலிடத்தில் உள்ளன.

ஆனால் ஒட்டுமொத்த சர்வதேச ரி - 20 கிரிக்கெட்டை பொறுத்தவரை தொடர்ச்சியாக 17 வெற்றிகளை பெற்று [illegible] முதலிடத்தில் உள்ளது. (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜிதவுக்கு...

நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியதன் மூலம் 262 இலட்சம் ரூபாய் இழப்பை அரசாங்கத்துக்கு ஏற்படுத்தியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய விசாரணை ஆணைக் குழுவில் வாக்குமூலம் அளிப்பதனை ராஜித சேனாரத்ன தவிர்த்து வருகிறார் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் சமர்ப்பிப்புகளை பரிசீலித்த பின்னர் கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசேகர இந்த உத்தரவை பிறப்பித்தார். (ஐ)

## பறிக்கப்படுகிறது...

மக்கள்தொகை மற்றும் கலாசார அடையாளத்தை மாற்றுவதற்கான ஒரு பரந்த மற்றும் கணக்கிடப்பட்ட உத்தியின் ஒரு பகுதியாகும்

1984 டிசெம்பர் 1 முதல் 15 வரை முல்லைத்தீவுக்கும் திருகோணமலைக்கும் இடையில் அமைந்துள்ள தமிழ் கிராமங்களில் ஒருங்கிணைந்த படுகொலைகள் நடத்தப்பட்டன. இந்தக் கொடூரமான தாக்குதல்கள் தமிழ் பொது மக்களை குறிவைத்தன. அவர்களில் பலர் பல நூற்றாண்டுகள் பழமையான நிலத்துடன் மூதாதையர் உறவுகளைக் கொண்டிருந்தனர். உயிர் பிழைத்தவர்கள் தங்கள் வீடுகளில் இருந்து விரட்டியடிக்கப்பட்டனர். மேலும், இப்பகுதியில் அரசால் ஆதரிக்கப்படும் சிங்களக் குடியேற்றம் தீவிரமாகத் தொடங்கியது.

அபிவிருத்தி என்ற பெயரில் சிங்களக் குடியேறிகள் கொண்டுவரப்பட்டனர். இலங்கை இராணுவத்தால் பெரிதும் பாதுகாக்கப்பட்டனர். வெளியேற்றப்பட்ட மற்றும் இடம்பெயர்ந்த தமிழ் பூர்வீக மக்கள் வறுமையில் வாடினர். அவர்களின் நிலங்கள் வாழ்வாதாரங்கள் மற்றும் கலாசார பாரம்பரியத்தை அணுகுவதில் அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்பு கிடைத்தது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற கொடூரமான சட்டங்களின் பயன்பாடு அத்தகைய செயல்களுக்கும் தண்டனையிலிருந்து விலக்குக்கும் சட்டப்பூர்வ ம்றைப்பை வழங்கியது.

1980 களில் இருந்து குறிப்பாக 2009 இல் போர் முடிவடைந்த பின்னர் அரசு ஆதரவுடன் ஆக்கிரமிப்பு தொடர்ந்தது. சிங்களக் குடியேற்றங்கள் எண்ணிக்கையிலும் உள்கட்டமைப்பிலும் வளர்ந்துள்ளன. அதே நேரத்தில் தமிழ் சமூகங்கள் ஓரங்கட்டப்பட்டன. வளங்கள் குறைவாக உள்ளன மேலும் பெரும்பாலும் இராணுவத்தால் அச்சுறுத்தப்படுகின்றன அல்லது கண்காணிக்கப்படுகின்றன.

மக்கள்தொகை வரைபடங்கள் 2015 இல் பெரும்பான்மையான தமிழர் பகுதியான வெலி ஓயாவின் தற்போதைய நிலைக்கு ஆபத்தான மாற்றத்தை எடுத்துக்காட்டுகின்றன.

தமிழர் தாயகம் அமைதியாகக் கைப்பற்றப்படும் வேளையில் நமது பாராளுமன்ற உறுப்பினர்களும் சிவில். சமூக அமைப்புகளும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? நமது உரிமைகளையும் நமது அடையாளத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்களிடமிருந்து ஏன் இவ்வளவு தேவையற்ற மௌனம் நிலவுகிறது?

நிலம் என்பது வெறும் மண் அல்ல - அது கலாச்சாரம் அடையாளம் நினைவகம் மற்றும் எதிர்காலம். நமது நிலத்தின் அரிப்பு நமது மொழி மதம் மற்றும் வாழ்க்கை முறையின் உயிர்வாழ்வை நேரடியாக பாதிக்கிறது. கடந்த 77 ஆண்டுகளில் நாம் அதிகமாக இழந்து விட்டோம். இப்போது எழுந்து செயல்பட வேண்டிய நேரம் இது. நமது நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும் நமது தமிழ் தாயகத்தைப் பாதுகாக்கவும் பொக்கிஷமாகக் கருதவும் நீதியைக் கோரவும் நாம் ஒன்றிணைய வேண்டும் - நாளை அல்ல அடுத்த ஆண்டு அல்ல - இப்போதே - என்றுள்ளது. (ஐ)

## நிலத்தில்...

பட்டுள்ளது என்று மன்னார் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதன் அடிப்படையில், மன்னாரிலிருந்து வந்த பொலிஸ் சிறப்பு குழு புதைத்து வைக்கப்பட்டிருந்த 40 கிலோ கஞ்சாவை கைப்பற்றியது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய வேலணையை சேர்ந்த மூன்று சந்தேக நபர்கள் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்

கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப் பொருள் இந்தியாவிலிருந்து படகு மூலம் கடத்திவரப்பட்டு புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## நம்பிக்கையில்லா...

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின்போது கிழக்கு மாகாண தளபதியாக பணியாற்றிய அருண ஜயசேகர தற்போது பாதுகாப்பு பிரதி அமைச்சராக இருப்பது அந்தத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு முரண் பாடு ஏற்படுத்துகிறது என்பன உள் ளிட்ட 15 குற்றச்சாட்டுகள் இந்த நம்பிக் கையில்லா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்தார். (அ-ஐ)

## எழுதுமட்டுவாழ்...

பெண் படுகாயமடைந்து, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவர் அங்கு உயிரிழந்தார்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வடக்கு...

ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னம், முல்லைத்தீவில் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்தமை என்பவற்றை கண்டித்து இலங்கை தமிழ் அரசு கட்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. (ஐ)

## வீரமுனை...

நேற்று செவ்வாய்க்கிழமை இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

இதன்போது, தூபிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, தீபம் ஏற்றப்பட்டு, அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஞா. சிறீநேசன், இ. சிறீநாத், க. கோடீஸ்வரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் சு. பாஸ்கரன், முன்னாள் தவிசாளர் கே. ஜெயசிறில் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**பின்னணி**

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் சம்மாந்துறை பிரதேசத்தில் வன்செயல்கள் இடம்பெற்றன. இதைத் தொடர்ந்து வீரமுனை, அயல் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனையை சேர்ந்த மக்கள் வீரமுனை சிந்தாத்திரை பிள்ளையார் ஆலயம், வீரமுனை இராம கிருஷ்ண மிஷன் பாடசாலைகளில் தஞ்சமடைந்திருந்தனர். இந்த நிலையில், 1990 ஓகஸ்ட் 12ஆம் திகதி இந்தப் பகுதிகளுக்குள் நுழைந்த முஸ்லிம் ஊர்காவல் படையினர் 400 வரையான தமிழ் மக்களை சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாட்டாரியல் கலை போட்டிகளை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 13

குரலோசை நுண்கலைகளின் தாயகம் எனும் கலைமன்றத்தின் 10ஆவது ஆண்டு கலைவிழாவை முன்னிட்டு நாட்டாரியல் கலைப் போட்டிகள் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், தென்மோடிக் கூத்து, இசைநாடகம் போன்ற துறைகளில் நடத்தப்படவிருக்கும் இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்குப் பெறுமதியான பரிசுத் தொகையும் வழங்கப்படவுள்ளது.

வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம் ஆகியவை மூன்று பிரிவுகளாகவும் ஏனைய போட்டிகள் வயதுக்கட்டுப்பாடு அற்றதாகவும் நடத்தப்படும். வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கப் போட்டிகளில் முதலாம் இடம் பெறுவோருக்கு 25 ஆயிரம் ரூபாயும் இரண்டாம் இடத்துக்கு 20 ஆயிரம் ரூபாயும் மூன்றாம் இடத்துக்கு 15 ஆயிரம் ரூபாயும் பரிசுகளாக வழங்கப்படும்.

ஏனைய போட்டிகளில் முதலாம் இடத்துக்கு 50 ஆயிரம் ரூபாயும் இரண்டாம் இடத்துக்கு 40 ஆயிரம் ரூபாயும் மூன்றாம் இடத்துக்கு 30 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

போட்டிகளுக்கான விதிமுறைகளை 077 615 0248 எனும் கைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியுமென்று குரலோசை கலை நிறுவனத்தின் இயக்குநர் தவநாதன் றொபேட் தெரிவித்துள்ளார். (ஐ)

# உதயங்க வீரதுங்க உள்ளிட்ட மூவரிடம் சி.ஐ.டி வாக்குமூலம்

கொழும்பு, ஓக. 13

இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர், ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க மற்றும் அவரது மனைவி ஆகியோரிடமிருந்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் வாக்குமூலங்களைப் பெற்று வருகின்றனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் முன்னெடுத்துள்ள விசாரணைகளின் அடிப்படையில், வாக்குமூலங்கள் பெறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# யாழ். பொருளாதார நிலையம் செப்ரெம்பரில் இயக்கப்படும்!

## அமைச்சர் வசந்த தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தை அடுத்த மாத இறுதிக்குள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்கு, அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க கோரியுள்ளார்.

யாழ்ப்பாணம் மட்டுவிலில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பித்தல் தொடர்பான கலந்துரையாடல் வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க, தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், யாழ்ப்பாண பொருளாதார மத்திய நிலையத்தை அடுத்த மாத இறுதிக்குள் மீள ஆரம்பிப்பது மற்றும் அதனை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கலந்துரையாடவே யாழ்ப்பாணம் வந்துள்ளேன். இலங்கையை பொறுத்தவரை 18 பொருளாதார மத்திய நிலையங்கள் காணப்படுகின்றன. அதில் 14 இயங்கி வருகிறது.

வடக்கில் அண்ணளவாக 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையம் இயங்கவில்லை. இந் நிலையம் மக்களுக்கு பொருத்தமான பாதையாகக் காணப்படவில்லை. பிரதேச செயலகத்தின் கீழ் செயல்பாடுகள் நடைபெறுகின்றன. அமைச்சின் கீழ் எந்தவொரு செயல்பாடும் காணப்படவில்லை.

இந் நிலையத்தை மீள அடுத்த மாத இறுதிக்குள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம் இதற்கு, அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

மேலும், இக் கலந்துரையாடலில் பொருளாதார மத்திய நிலையத்துக்குரிய கடை உரிமையாளர்களின் தேவைப்பாடுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. (ஐ)

## 62,000 இளையோருக்கு...

மாநாட்டில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இளைஞர்களின் பங்குப்பற்றல் மிகவும் முக்கியமானதாகும். அவர்களால்தான் சிறந்ததொரு நாட்டை கட்டியெழுப்ப முடியும். அரசியல் அதிகார வர்க்கத்தினரின் கைகளில் இருந்த இளைஞர் மன்றங்கள் இன்று மீண்டும் நாட்டை நேசிக்கும் - நாட்டை அபிவிருத்தி செய்யத் துடிக்கும் இளைஞர்களின் கைளுக்கு கிடைத்துள்ளன.

"தேசிய பொருளாதாரத்தில் மிகப் பெரிய பங்கை இளைஞர்கள் வகிக்க வேண்டும். இந்தக் கதிரையில் நாம் நிரந்தரமாக அமர்ந்திருக்க போவதில்லை. கதிரையில் அமர்ந்தபோதே அதிலிருந்து, செல்லும் நாள் குறித்தும் எண்ணியுள்ளோம். ஆனால், இந்த அதிகாரம் மீண்டும் யாரிடம் செல்ல வேண்டும் என்பதையும் எண்ணியுள்ளோம் - எதிர்கால இளைய தலைமுறையினர் வசமே அதிகாரம் செல்ல வேண்டும். அதற்கான பணியையே நாம் ஆற்றி வருகிறோம்.

"அரச துறையில் பல்வேறு வெற்றிடங்கள் உள்ளன. அரச சேவையில் அதிகளவானவர்கள் உள்ளபோதிலும், துறைசார் நிபுணத்துவம் உள்ளவர்கள் குறைவாக உள்ளனர். அவ்வாறான வெற்றிடங்களை நிரப்பவுள்ளோம். குறிப்பாக, 62 ஆயிரம் பேருக்கு அரச சேவையில் வெற்றிடம் உள்ளது. அந்த வெற்றிடத்தை நிரப்பத் தீர்மானித்துள்ளோம். விரைவாக குறித்த வெற்றிடங்களை நிரப்புமாறு அரச நிறுவனங்களுக்கு பணித்துள்ளோம்" - என்றும் கூறினார். (அ-ஐ)

## பிரியந்தவை...


பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து பொலிஸ் மா அதிபருக்கான பதவி வெற்றிடமானது. இதையடுத்து பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவை புதிய பொலிஸ் மா அதிபராக நியமிக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அரசமைப்பு பேரவைக்கு பரிந்துரைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# புலம்பெயர் தமிழர்களால் மகிந்தவுக்கு அச்சுறுத்தல்!

**ஜே.வி.பி முன்னாள் உறுப்பினர்**



கொழும்பு, ஒக. 13

**போருக்கு இராணுவத் தீர்வை நாடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஊக்குவித்த ஜே.வி.பி., அவரது சலுகைகளைக் குறைப்பதன் மூலம் புலம்பெயர் தமிழர்களின் அச்சுறுத்தல்களுக்கு அவரை ஆளாக்கக்கூடாது என ஜே.வி.பியின் முன்னாள் அரசியல் குழு உறுப்பினர் நந்தன குணதிலக்க தெரிவித்துள்ளார்.**

ஹிக்கடுவையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புலம்பெயர் தமிழர்கள் மற்றும் ஜே.வி.பி.யின் அரசியல் குழு உறுப்பினர்கள் பலரின் தூண்டுதலின் பேரில் முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளைக் குறைக்கும் சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்மூலம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் பிரிவினைவாத இயக்கங்களின் இலக்காக மாறக்கூடும் என்பது மிகவும் கவலைக்குரியதாகும்.

இது தொடர்பாக அரசாங்கம் எங்கள் கருத்துக்களை புறக்கணிக்காது என்று நான் நம்புகிறேன். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு ஜே.வி.பி. ஓய்வுபெற்ற இராணுவத்தினரின் கூட்டமைப்பை உருவாக்கியது.

ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜேவீரவை படுகொலை செய்த தோரதெனிய அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். தேசிய மக்கள் சக்தியை ஆட்சிக்குக் கொண்டுவருவதில் புலம்பெயர் தமிழர்கள் பெருமளவில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

செம்மணிப் புதைகுழியை அகழ்வதில் அதிக ஆர்வம் காட்டும் அரசாங்கம், தற்போது சூரியகந்த மற்றும் ஹோகந்தர புதைகுழிகளிலும் இதேபோன்ற ஆர்வத்தைக் காட்டியுள்ளது.

2010 ஆம் ஆண்டில், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை ஜே.வி.பி. ஆதரித்து அவரை ஆட்சிக்கு கொண்டு வரபிரசாரம் செய்தது. சரத் பொன்சேகா வெற்றி பெற் றிருந்தால், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்திருப்பார்.

திருகோணமலையில் ஜே.வி.பி இயக்கத்தை சரத் பொன்சேகாவே அடக்கினார்.

பிரிவினைவாத இயக்கத்தால் உருவாக்கப்பட்ட ஒரு பெரிய அரசியல் நெருக்கடியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்த்து வைத்தார்.

ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சோசலிசத்தை நோக்கிய போராட்டத்தில் நாங்கள் நம்பிக்கை கொண்டோம், இதன் அடிப்படையிலேயே நாங்கள் ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி அரசாங்கத்தை உருவாக்கினோம்.

அதில் ஜே.வி.பியினர் பலர் அமைச்சரவை பொறுப்பைக் கொண்டிருந்தனர் - என்றார். (அ)

# இணக்கப்பாடுகளை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படின் தொழிற்சங்க போராட்டம்

**மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை**

கொழும்பு, ஒக. 13

வைத்தியர்களின் இடமாற்றச் செயல்பாட்டில் ஏற்பட்ட முறைகேடுகளைத் திருத்துவது தொடர்பாக, சுகாதார அமைச்சருடன் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த சில மாதங்களாக, சுகாதார அமைச்சுக்குள் வைத்தியர் இடமாற்றப் பட்டியல்களைத் தயாரித்தல், இடமாற்ற உத்தரவுகளை செயல்படுத்துதல் மற்றும் வைத்தியசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல் ஆகிய செயற்பாடுகள் உரிய வகையில் மேற்கொள்ளப்படவில்லை என அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் விளைவாக எழுந்துள்ள சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, தொழிற்சங்க நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிக்கவேண்டியுள்ளது என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், சுகாதார அமைச்சர் அளித்த வாய்மொழி வாக்குறுதிகளை செயல்படுத்தத் தவறுகின்றமை, தங்கள் சங்கத்திற்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சருக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்பில் அதன் நிறைவேற்றுக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# தமிழ் மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறை; சந்தோஷ் ஜாவுக்கு எடுத்துரைத்த ஹரிணி

கொழும்பு, ஒக. 13

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையில் பிரதமர் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, கல்வித் துறையில் இரு நாடுகளுக்கும் இடையே வலுவான ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய பிரதமர், தலைமைத்துவம் மற்றும் திட்டமிடலில் கல்வித் துறை அதிகாரிகளின் திறன்களை வளர்ப்பதற்கான பயிற்சித் திட்டங்களின் அவசியத்தையும் குறிப்பிட்டார்.

தமிழ் மொழியில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு அவசர தீர்வுகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும், கல்வி மற்றும் தரத்திற்கான அணுகலை மேம்படுத்த இலங்கையில் நடந்து வரும் கல்வி சீர்திருத்தங்களையும் பிரதமர் விளக்கினார்.

அதேநேரம், இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் இந்தியத் திட்டங்களை விளக்கிய இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா,பெருந்தோட்ட பகுதி பாடசாலை திட்டங்கள், திறன் வகுப்பறைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சித் திட்டங்கள் குறித்து விரிவான விளக்கத்தை அளித்துள்ளார்.

அத்துடன், கல்வித் துறையில் மேலும் நெருக்கமாகப்



பணியாற்றுவதற்கான இந்திய அரசாங்கத்தின் ஆர்வத்தை வெளிப்படுத்திய தூதுவர், இரு நாடுகளின் பல்கலைக்கழகங்களுக்கு இடையே புலமைப்பரிசில் வழங்குவது குறித்தும் கலந்துரையாடியதாக பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# கடன்களை திருப்பி செலுத்தும்வரை எரிபொருள் வரியை நீக்க முடியாது!

**எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி**

கொழும்பு, ஒக. 13

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்ற கடன்களை முழுமையாக திருப்பிச் செலுத்தும் வரை எரிபொருளுக்கு விதிக்கப்பட்ட வரிகளை நீக்குவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்று எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிசக்தி அமைச்சர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன கடன்களில் ஒரு பகுதி தற்போது திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த வரிகளை நீக்குவது கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலைக்கு வழிவகுக்கும்.

கடனில் 30 வீதம் முதல் 40 வீதம் வரை திருப்பிச் செலுத்தப்பட்டுவிட்டது என்று நான் நினைக்கிறேன். கடன் திருப்பிச் செலுத்தும் வரை, 50 வீத எரிபொருள் வரியைக் குறைக்க முடியாது.

இப்போது அவ்வாறு செய்தால், தொகையை வசூலிக்க வேறு வழிகளைப் பார்க்க வேண்டியிருக்கும்-என்றார். (அ)

# குறைந்த பயன்பாடுள்ள காணிகளுக்கு பொருத்தமான முதலீட்டாளர்கள் தேர்வு

கொழும்பு, ஒக. 13

அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான குறைந்தளவு பயன்பாடுகளை கொண்ட காணிகள் மற்றும் சொத்துக்களில் உச்சப் பயன் பெறுவதற்காக அவற்றை பொருத்தமான முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள், தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபை, இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை போன்ற நிறுவனங்களுக்குச் சொந்த மாகவுள்ள குறைப்பயன்பாட்டை கொண்ட காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

குறித்த காணிகளை பொருளாதார ரீதியாக பயனுள்ள கருத்திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்ட தனியார் முதலீடுகளுக்கு வழங்குவதற்கு 2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, அந்த காணிகளில் பெருந்தோட்ட அல்லது விவசாய நடவடிக்கைகள், பெருந்தோட்டத்துடன் தொடர்புடைய சுற்றுலாத்துறை மேம்பாட்டு நடவடிக்கைகள், கால்நடைவள அபிவிருத்தி, நீர் மின்னுற்பத்தி, சூரிய மின்னுற்பத்தி, கைத்தொழில் அபிவிருத்தி, நன்னீர் மீன்பிடித்துறை மற்றும் ஏனைய பெருந்தோட்டத்துறை பொருளாதார புத்தாக்க நடவடிக்கைகளுக்கான முதலீடுகளுக்கு வாய்ப்புக்கள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, அடையாளங் காணப்பட்டுள்ள காணிகளுக்குப் பொருத்தமான முதலீட்டாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விருப்பக் கோரல்களைப் பெற்றுக் கொள்வதற்கு விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org